Registered as a News paper in Sri Lanka பக்கங்கள்: 06 விலை ரூபா 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஸு சித்திரை மீ 25 ஆம் உ செவ்வாய்க்கிழமை (08-05-1990) ஹிஜ்ரி 1410 ஷவ்வா 12 ஓசை 79

## கொக்கிளாயில் புதிய இராணுவ முகாம்

(முல்லைத்தீவு)

கொக்கிளாயிலுள்ள சிங்களக் குடியிருப்புக்களுக்கு மத்தியில் இலங்கை இராணுவ கஜபாகுப் பிரிவினர் பெரிய அளவினதான முகாமொன்றை அமைத்து வருகின்றனர். இம்முகாமில் பெருமளவில் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டு வருகின்றார்கள்,

கொக்கிளாயிலுள்ள பள்ளிக்கூட மொன்றில் இதுவரை காலமும் முகாம் அமைத்திருந்த இலங்கை இராணுவம் மே மாதம் பத்தாம் திகதியுடன் பள்ளிக்கூடத்திலிருந்து வெளியேற உள்ளார்கள். பள்ளிக்கூட முகாம் மூடப்படுவதால், பள்ளிக்கூடத்தை மீளவும் ஆரம்பிக்க ஆயத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன. அயலிலுள்ள பிள்ளைகள் சிரமமின்றிப் பள்ளிக்கூடத்தில் படிக்க வசதியாக இருக்கும் என்று பெற்றோர்கள் சந்தோஷமடைந்துள்ள வேளையில் புதிய இராணுவ முகாமொன்றை இப்பகுதியில் அமைக்கும் வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. (58)

### மட்டக்களப்பு மாவட்ட எம். பி.

# சாம் தம்பிமுத்து சுட்டுக் கொலை!

## மனைவிக்கும் கடும் காயம்; கொழும்பில் சம்பவம்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. சாம் தம்பிமுத்து நேற்றுநண்பகல் ஒன்றரை மணியளவில் கொழும்பில் வைத்து இனம் தெரியாத இருவரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவரது மனைவிக்கும் கடும் காயம் ஏற்பட்டு கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு கொண்டுசெல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளதாக முதலில் வந்த செய்திகள் தெரிவித்தன. பின்னர் நேற்றிரவு கிடைத்த தகவலின்படி அவர் ஆபத்தான கட்டத்தைத் தாண்டி விட்டாரென்று தெரிகிறது.

இவர்கள் சென்ற கார் கொழும்பிலுள்ள கனடாத் தூதரத்துக்கு வந்து இறங்கிச் சென்றபோதே இச் சம்பவம் நடைபெற்றது. கார்ச்சாரதி காயமெதுவுமின்றி உயிர் தப்பினார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் சாம் தம்பிமுத்துவைச் சுட்டுக் கொன்று விட்டு தப்பிச் சென்றதாகக் கூறப்படுகிறது.

கனடா செல்லும முயற்சியிலீடுபட்டிருந்ததாகக் கருதப்படும் சாம் தம்பிமுத்து தமது மனைவிகலா சகிதம்கறுவாக்காட்டிலுள்ளகனடாதூதரகத்துக்குச் சென்று கொண்டிருந்தபோதே சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிகிறது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியிலிருந்த திரு சாம் தம்பிமுத்து பின்னர் தமிழரசுக் கட்சியின்

(6ஆம் பக்கம் பார்க்க)

## இடி தாக்கி மரணம்

(பொத்துவில் நிருபர்)

பொத்துவிலில் இடி முழக்கத்துடன் கூடியமழை பெய்தபோது மின்னல் தாக்கியதால் வயல் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தகுடும்பஸ்தரான

## வெள்ளிக்கிழமை ஒரு மணியுடன் பாடசாலை மூடப்படும்

(யாழ்ப்பாணம்)

தமிழ் ஆசிரியர் சங்கத்தலைவர் திரு. டி.எஸ்.கே.வனசிங்கவின் அகால மரணம் குறித்த ஞாபகமாக இம்மாதம் பதினோராம் திகதியன்று அனைத்து யாழ்.மாவட்ட பாடசாலைகளும் மதியம் ஒருமணியுடன் மூடப்படும்.

திரு. டி.எஸ்.கே. வனசிங்க அவர்கள் தேசவிரோதகும்பல்களால் கடந்தவருடம் ஜனவரி மாதமளவில் சுட்டுக்கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (லோ)

## நிர்வாக சேவை போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வட கிழக்கு மாகாணத்தில் உள்ள இலங்கை நிர்வாக சேவை போட்டிப் பரீட்சைகள் ஜூன் மாதம் ஒன்பதாம் திகதி நடாத்தப் படவுள்ளன

நிர்வாகசேவை வகுப்புii தரம்ii பதவிவெற்றிடங்களை நிரப்புவதற்கான மட்டுப்படுத்தப்பட்டபோட்டிப் பரீட்சைகளும்நடாத்தப் படஉள்ளன இதற்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 18ஆம் திகதிக்குமுன் பரீட்சை ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்

மேலதிக விபரங்களுக்கு ஏப்பிரல் மாதம் இருபதாம் திகதி வர்த்தமானியைப் பார்வையிடவும் (லோ)

### யாழ். மாவட்டத்தில்

## அடுத்த மாதம் பாடசாலை மாணவருக்கு உணவு முத்திரை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலும் ...

திரை சம்பந்தமாகவும், மாணவர்கள் வீட்டிலிருந்து

### கிளிநொச்சி

## காணிப்பதிவு அலுவலகம்

# வட-கிழக்கில்புயல் அபாயம் நீங்கியது

## நாகபட்டினம் மீனவர் நால்வர் பருத்தித்துறையில் தஞ்சம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களின் கரையோரப் பகுதியை கடுமையாகத் தாக்கக்கூடுமென்று அஞ்சப்பட்ட சூறாவளியும் கடும்மழையும் கரையைத் தாண்டிச் சென்றுவிட்டதாகவும் இனி புயல் மழை ஆபத்தில்லை என்றும் நேற்று வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

### நாகபட்டினம் மீனவர் தஞ்சம்


இதேசமயம் தமிழ்நாடு, நாகபட்டினத்திலிருந்து கடற்றொழிலுக்குப் புறப்பட்ட நான்கு மீனவர்கள் கடலில் இயந்திரக் கோளாறு காரணமாக நங்கூரமிட்டிருந்தபோது வீசிய புயல் காற்றில் நங்கூரமும் அறுத்தெறியப்பட்டு பருத்தித்துறைக் கரைக்கு வந்து ஒதுங்கினர்.

இவர்களை விடுதலைப்புலிகள் பொறுப்பேற்றுப் பாதுகாத்து வருகின்றனர்.

கரை ஒதுங்கிய மீனவர்கள் பெயர் விபரம் வருமாறு:-

செல்வராஜ் பழனிவேல் (வயது 25) நாகப்பட்டினம், சுப்பிரமணியம் அஞ்சப்பன்(20 நாகபட்டினம், பக்கிரிசாமி சுப்பிரமணியம் (24) நம்பியார் நகர், கௌரிராஜன் செல்வகுமார் (24)

இவர்கள் வந்த படகின் பெயர் பார்வதி அம்மாள்.



...ளவில் கொழும்பில் வைத்து இனம் தெரியாத இருவரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவரது மனைவிக்கும் கடும் காயம் ஏற்பட்டு கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு கொண்டுசெல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளதாக முதலில் வந்த செய்திகள் தெரிவித்தன. பின்னர் நேற்றிரவு கிடைத்த தகவலின்படி அவர் ஆபத்தான கட்டத்தைத் தாண்டி விட்டாரென்று தெரிகிறது.

இவர்கள் சென்ற கார் கொழும்பிலுள்ள கனடாத் தூதரத்துக்கு வந்து இறங்கிச் சென்றபோதே இச் சம்பவம் நடைபெற்றது. கார்ச்சாரதி காயமெதுவுமின்றி உயிர் தப்பினார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் சாம் தம்பிமுத்துவைச் சுட்டுக் கொன்று விட்டு தப்பிச் சென்றதாகக் கூறப்படுகிறது.

கனடா செல்லும் முயற்சியிலீடுபட்டிருந்ததாகக் கருதப்படும் சாம் தம்பிமுத்து தமது மனைவிகலா சகிதம்கறுவாக்காட்டிலுள்ளகனடா தூதரகத்துக்குச் சென்று கொண்டிருந்தபோதே சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிகிறது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியிலிருந்த திரு சாம் தம்பிமுத்து பின்னர் தமிழரசுக் கட்சியின்

(6ஆம் பக்கம் பார்க்க)

## இடி தாக்கி மரணம்

(பொத்துவில் நிருபர்)

பொத்துவிலில் இடிமுழக்கத்துடன் கூடியமழை பெய்தபோது மின்னல் தாக்கியதால் வயல் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தகுடும்பஸ்தரான ஹானிபா என்பவர் துடிதுடித்து ஸ்தலத்திலே மரணமானார்.

மற்றொருவர் நினைவிழந்தார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

கிளிநொச்சி

## காணிப்பதிவு அலுவலகம் ஆங்கிலத்தில் கடிததொடர்பு

கிளிநொச்சி காணிப்பதிவு அலுவலகத்திலிருந்து காணி சம்பந்தமாகபொதுமக்களுக்கு அனுப்பப்படும் கடிதங்கள் ஆங்கிலத்திலேயே அனுப்பப்படுகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஏழை விவசாயிகளும் குறிப்பாக ஆங்கிலம் தெரியாதவர்களும் இக்கடிதங்களுடன் மொழிபெயர்ப்புக்காக அலைந்து திரிகின்றனர்.

தமிழ்மொழி அமுல் கட்டாயப் படுத்தப் பட்டுள்ளதாக

(6ஆம் பக்கம் பார்க்க)

...பதவிவெற்றிடங்களை நிரப்புவதற்கான மட்டுப்படுத்தப்பட்டபோட்டிப் பரீட்சைகளும்நடாத்தப் படஉள்ளன இதற்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 18ஆம் திகதிக்குமுன் பரீட்சை ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்

மேலதிக விபரங்களுக்கு ஏப்பிரல் மாதம் இருபதாம் திகதி வர்த்த மானியைப் பார்வையிடவும் (லோ)

யாழ். மாவட்டத்தில்

## அடுத்த மாதம் பாடசாலை மாணவருக்கு உணவு முத்திரை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலும் அடுத்த மாதம் தொடக்கம் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் மதிய உணவை முத்திரைகளாக வழங்குவதற்கு யாழ். மாவட்ட கல்விப்பணிப்பாளருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது,

விரைவில் இதற்கான சுற்று நிருபத்தினை யாழ். மாவட்டப்பாடசாலைகளுக்கு தாம் அனுப்பி வைக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார் இச்சுற்றறிக்கையில் மாணவர்களுக்கு வழங்கப்படும் முத்திரை சம்பந்தமாகவும், மாணவர்கள் வீட்டிலிருந்து கொண்டு வரும் உணவின் தராதரம் பற்றியும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருக்கும் எனவும் அவர் தெரிவித்தார். (லோ)

## நாகபட்டினம் மீனவர் தஞ்சம்


இதேசமயம் தமிழ்நாடு, நாகபட்டினத்திலிருந்து கடற்றொழிலுக்குப் புறப்பட்ட நான்கு மீனவர்கள் கடலில் இயந்திரக் கோளாறு காரணமாக நங்கூரமிட்டிருந்தபோது வீசிய புயல் காற்றில் நங்கூரமும் அறுத்தெறியப்பட்டு பருத்தித்துறைக் கரைக்கு வந்து ஒதுங்கினர்.

இவர்களை விடுதலைப்புலிகள் பொறுப்பேற்றுப் பாதுகாத்து வருகின்றனர்.

கரை ஒதுங்கிய மீனவர்கள் பெயர் விபரம் வருமாறு:-

செல்வராஜ் பழனிவேல் (வயது 25) நாகப்பட்டினம், சுப்பிரமணியம் அஞ்சப்பன் (20 நாகபட்டினம், பக்கிரிசாமி சுப்பிரமணியம் (24) நம்பியார் நகர், கௌரிராஜன் செல்வகுமார் (24)

இவர்கள் வந்த படகின் பெயர் பார்வதி அம்மாள்.



## அக்கரைப்பற்று - கல்முனை பஸ் சேவை சீராக இல்லை

(அட்டாளைசேனை)

அக்கரைப்பற்று கல்முனை பஸ்சேவை கடந்த மூன்று மாதங்களாக சீராக நடைபெறுவதில்லை

இதனால் இப்பகுதி பயணிகள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றன. இவ் வீதியால் வரும் உழவு யந்திர பெட்டிகளில் தொத்திக்கொண்டு பயணம் செய்கின்றனர்.

ஒரு பஸ் சேவைக்கு விடப்பட்டால் ஒரு மணிநேரத்தில் மற்றைய பஸ் சேவையில் ஈடுபடுத்தப்படும்.

இதேபோல இந்தப்பாதையால் செல்லும் மினிபஸ்களும் மிகமோசமான நிலையில் இருப்பதால் பயணிகளின் உடைகள் துருப்பிடித்த அடையாளங்கள் ஏற்படுகின்றன. (46)

## முறைசாராகல்வி பயிற்சிவகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் மகாவித்தியாலயத்தில் முறைசார கல்விப் பிரிவில் 1990ஆம் ஆண்டுக்கான பயிற்சி வகுப்பு வியாழன் காலை ஒன்பது மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படும்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி அரசாங்க ஆஸ்பத்திரிக்கு கடந்த மூன்று மாதங்களாக சுகாதாரத் திணைக்களம் மருந்துகளை வழங்கவில்லை.

இதனால் இங்கு வரும் நோயாளிகள் வெளியிடங்களில் மருந்துகளை வாங்க வேண்டிய நிலை பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

நாட்டு நிலைமை சீராகிவருவதால் அதிகமான நோயாளர்கள் இங்கு வந்த வண்ணம் இருக்கின்றனர்.

இது குறித்து ஆஸ்பத்திரி நோயாளர் நலன்புரிச் சங்கம் உயர் அதிகாரிகளிடம் கேட்டுள்ளது.

## பொத்துவில் கடற் பரப்பில் எண்ணெய் கசிவுகள்

(அக்கரைப்பற்று)

பொத்துவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவின்கீழ் உள்ள கோமாரிக்கிராம கடற்பரப்பில் எண்ணெய் கடல்அலைகள் மூலம்அள்ளுண்டு கரையை நோக்கி வந்துகொண்டிருக்கும் மர்மம் யாருக்கும் விளங்காத புதிராக இருந்து வருகின்றது.

இதுவரை கடற்கரைப் பிரதேசத்தில்சுமார் இரண்டுமைல் தொலைவு வரைக்கும் எண்ணெய் படிந்து கடல்மண் அசுத்தமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது, கடந்த மூன்று வார காலமாக இப்பிரதேச கடல் நீர் எண்ணெய் கசிவு உள்ளநீராககாணப்பட்டதாம் கடலில் சுமார் இரண்டுமைல்

(6ஆம் பக்கம் பார்க்க)

## அட்டாளைச்சேனையிலும் அஞ்சல் கையாடல்!

(அட்டாளைச்சேனை)

அட்டாளைச்சேனை அஞ்சல் நிலையத்திலும், பாலமுனை உப தபால் நிலையத்திலும் வெளிநாட்டுக் காசோலைகள் மாற்றுவதில் பல மோசடிகள் நடப்பதாகப் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தக் கைங்கரியத்தைத் தபால் விநியோகம் செய்யும் ஊழியர்கள் தான் செய்கிறார்களாம்.

வெளிநாடுகளிலிருந்து வரும் பதிவுத் தபாலுறைகளைத் தபால் விநியோகம் செய்யும் ஊழியர்கள் தாமே கையெழுத்து வைத்து எடுத்துவிடுகிறார்கள். பின்பு போலிக் கையெழுத்துடன், போலியான அடையாள அட்டைகளைச் சமர்ப்பித்து வங்கிகளில் வெளிநாட்டுக் காசோலைகளை மாற்றிப் பணமாக்கிக் கொள்கிறார்கள்.

வேலியே பயிரை மேயும் இவ்வேலை முன்பு ஒரு சமயம் இங்கு நடைபெற்றுள்ளதாம்,

இது தொடர்பாகப் பொலிஸ் புலன்விசாரணை மேற்கொண்டுள்ளது,

## தேசிய பட்டியல் மூலமாக சுதந்திரக்கட்சி எம். பிக்கள்

(கொழும்பு)

தேசிய பட்டியல் மூலமாக ஐந்து பேரை பாராளுமன்ற உறுப்பினர்களாக நியமிக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது.

இதற்காக தற்போதுள்ள ஐந்து எம். பிக்களை ராஜினாமாச் செய்யுமாறும் சுதந்திரக் கட்சி கோரியுள்ளதால் இந்த எம். பிக்கள் பெரிதும் கவலையடைந்துள்ளனர்.

டாக்டர் மேர்வின் டீ சில்வா, டாக்டர் கமல் கருணநாயக்கா, ரீ. டபிள்யூ ராஜரட்னம் (முன்னாள் நீதியரசர்) எல்.ஏ. பி. பெரேரா, எஸ். சோமசார, ஆகியோரே தற்போதுள்ள இந்த எம். பிக்களாவர்.

இதனால் சுதந்திரக் கட்சிக்குள் வேறுபாடு நிலவுவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## வடமாகாணத்திற்கு போதிய வனவள அதிகாரிகள் இல்லை

(யாழ்ப்பாணம்)

தற்போதைய நிலையில் தென்பகுதியில் வனவளம் மிக அருகிய நிலையில் உள்ளது. ஆனால் வட கிழக்குப் பகுதியில் வளமான காட்டுவளம் கவனிப்பாரற்ற நிலையில் இருக்கவேண்டியதாய் உள்ளது. இப்படியிருந்தும் தென் பகுதியில் ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் ஒவ்வொரு வனவள அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். வடபகுதிக்கோ வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய ஐந்து மாவட்டங்களுக்கு ஒரேயொரு வட பிராந்திய வனவள அதிகாரி மட்டும் சேவை செய்து வருகிறார் என யாழ்ப்பாணம் வனவள திணைக்கள அலுவலர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேலும் அலுவலர்கள் வனவள திணைக்களத்தின் வசதியற்ற நிலைபற்றிக் குறிப்பிடும்போது, எமது பிராந்திய வனவள அதிகாரிக்கு இவ் ஐந்து மாவட்ட அலுவலகங்களிலும் துணை அதிகாரிகள் எவரும்நியமிக்கப்படவில்லை. இதற்குக் காரணம் வனவள

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்மொழி விண்ணப்பங்கள் புறக்கணிக்கப்பட்டன

(மட்டக்களப்பு)

சுகாதார அமைச்சினால் அமைய தொழிலாளர்கள் பதவிக்கான தமிழ்மொழி விண்ணப்பங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகப் புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதாரத் தொழிலாளர் பதவிக்கான விண்ணப்பம் பத்திரிகை விளம்பரம் மூலம் மும்மொழிகளிலும் கோரப்பட்டிருந்தது.

இதன் பிரகாரம் விண்ணப்பம் செய்தவர்களுக்கான நேரமுகப் பரீட்சைக்கு அழைப்புகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(6ஆம் பக்கம் பார்க்க)

## கட்டணம் செலுத்தாததால் டிப்போ தொலைபேசி துண்டிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு இ. போ. ச. டிப்போவினால் தொலைத் தொடர்புகள் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய தொலைபேசிக் கட்டணம் வாடகை என்பன செலுத்தப்படாத காரணத்தினால் தொலைபேசி துண்டிக்கப்பட்டுள்ளது.

தொலைத் தொடர்புகள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பயிலுநர் ஆசிரியர்களுக்கு சம்பளம்

(யாழ்ப்பாணம்)

பயிலுநர் ஆசிரியர்களுக்கு சம்பழம் வளங்குவதற்கான முதற்கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது இச் சம்பளம் வழங்கும் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பயிலுநர் ஆசிரியர்களும் வைத்தியசாலைப் பிறப்பத்தாட்சிப் பத்திரங்களையும் திருமண மாணவராயின் திருமண அத்தாட்சிப் பத்திரங்களும் சமர்பிக்கப்பட வேண்டும் என யாழ் மாவட்ட கல்விப்பணிப்பாளர் திரு.இ. சுந்தரலிங்கம் தெரிவிக்கின்றார். (லோ

# நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் மூலம் ஆஸ்பத்திரிகளுக்கு பல நன்மைகள் உண்டு

(சாவகச்சேரி)

நோயாளர் நலன்புரிச் சங்கம் என்ற பெயரை மாற்றி வைத்திய சாலைக் குழு அல்லது வைத்தியசாலை அபிவிருத்திக் குழு எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டால் அதன் மூலம் நோயாளர், பொதுமக்கள், வைத்திய சாலை ஆகிய மும்முனைகளுக்கும் பயன் கிடைக்கும்.

மேற்கண்டவாறு தென்மராட்சிப்பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. பு. சுந்தரம் பிள்ளை சாவகச்சேரி நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் மண்டப திறப்பு விழாவின் போது கூறினார்.

சாவகச்சேரி அரசினர் ஆஸ்பத்திரி வளவினுள் ஒருபழைய கட்டடத்தில் இப்பணிமனை திறக்கப்பட்டது.

சாவகச்சேரி நகரசபை விசேட ஆணையாளர் திரு. த. நவரத்தினராஜா தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

உதவிஅரசாங்கஅதிபர் திரு. சுந்தரம்பிள்ளை மேலும்கூறியதாவது;

வைத்தியசாலைக் குழு அல்லது வைத்தியசாலை அபிவிருத்திக் குழு என்ற பெயரில் இக்குழு இயங்குமானால் உயர் அதிகாரிகள் முதல் அமைச்சு வரைக்கும் சென்று சில அபிவிருத்திகளைக் கேட்கக் கூடிய வாய்ப்பு ஏற்படும்.

அப்படியானகுழுவின் கோரிக்கைகள் சிபாரிசுகளுக்கு அமைச்சுஅதிகமுன்னுரிமைவழங்கும்

சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு வெளிநோயாளர் பகுதிக்கான புதிய கட்டடம் ஒன்று அமைக்கப்பட வேண்டியது அவசியம். இதற்கான முயற்சியை நான் மேற்கொண்டு வருகிறேன். இந்த ஆஸ்பத்திரி நோயாளர்களுக்கும், பொது மக்களுக்கும் ஆஸ்பத்திரி நிர்வாகத்துக்குமிடையில் ஓர் பாலமாக இச்சங்கம் அமையவேண்டும் என்றார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு. பாப்பா பேசுகையில் ஒற்றுமை என்றஒருசிறந்த மூலதனத்தின் கீழ் நாம் சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுவதன் மூலமே எமது தமிழ்ச் சமுதாயம் ஒரு சுதந்திரமுள்ள தேசிய சமுதாயமாக விளங்க முடியும் என்றார்.

ஆஸ்பத்திரி லிகிதர் திரு. தனபாலசிங்கம் பேசுகையில், இந்த ஆஸ்பத்திரியில் தலைமைக்கு ஒன்றுமில்லை. மருத்துவ அதிகாரி இல்லை. ஊழியர் மேற்பார்வையாளர் இல்லை. ஒருமேற்றன்இல்லை இந்த நிலையில் எப்படி இந்த ஆஸ்பத்திரி நிர்வாகம் இயங்க முடியும் என்றார்.

டாக்டர் சிவபாதம் உட்பட பலர் உரை நிகழ்த்தினர். சங்கச் செயலாளர் இளைப்பாறிய அதிபர் திரு. சின்னத்தம்பி நன்றியுரை நிகழ்த்தினார். (35)

# மொத்த வியாபாரிகளை பதிவுசெய்ய நடவடிக்கை

(காத்தான்குடி)

காத்தான்குடி பிரதேசத்தில் மொத்த வியாபாரிகளைப் பதிவு செய்ய உதவி அரசாங்கஅதிபர் ஜனாப் எம். உதுமான் லெப்பை நடவடிக்கை எடுத்துள்ளார்.

பிரதேசத்திலுள்ள ஜும்மாப் பள்ளி வாசல்களின் மூலம் விஷேட சுற்றறிவித்தல்களை அனுப்பி வாகன வசதியும், களஞ்சியப் படுத்தும் இடவசதியும் உள்ள வியாபாரிகளைத் தம்முடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு அவர் கேட்டிருக்கிறார்.

கடந்தசிலஆண்டுகளாகஇப்பிரதேசத்தில் நிலவி வந்த அச்சநிலை தற்போது நீங்கியிருப்பபதால் வியாபாரிகள் பலரும் தமது வியாபார நடவடிக்கைகளை விஸ்தரித்து வருகின்றனர்,

உதவி அரசாங்க அதிபரின் வேண்டுகோளுக்கமைய வியாபாரிகள் பலரும் மொத்த வியாபாரிகளாகத் தம்மைப் பதிவுசெய்துகொள்ள ஆர்வம் காட்டிவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (55,

# கலாசார பேரவை பட்டமளிப்பு விழா

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் பாரம்பரிய கலைகளான நாட்டுக்கூத்து, நாட்டார் பாடல்கள் போன்ற கிராமிய கலைகளுக்கு புத்துயிர் அளித்தவர் வித்துவான் வி. சீ. கந்தையா பண்டிதர்.

மேற்கண்டவாறு மட்டக்களப்பு மாவட்ட கலாசார பேரவையின் பட்டமளிப்பு விழா, புத்தாண்டு விழா ஆகியவற்றில் உரையாற்றிய திரு. ரீ. பாக்கியநாயகம் குறிப்பிட்டார்.

மேலதிக அரச அதிபர் திரு. இரா. தியாகலிங்கம் தலைமையில் நகரமண்டபத்தில் இவ் வைபவம் நடைபெற்றது.

திரு. ரீ. பாக்கிய நாயகம் மேலும் பாராட்டுரையாற்றுகையில்,

தமிழ் அறிவு மிக்கவர், சமூக, சமய பணிகளில் நாட்டம் கொண்டவர். தனது தொண்டு நிறைப்படுத்தியவர் 1960ஆம்ஆண்டு இம் மாவட்ட கலை வளர்ச்சிக்குப் பொற்காலம். நாட்டுக்கூத்து, மறுமலர்ச்சிக்கு வித்திட்டு சமுதாயத்தில் அடிமட்டத்திலிருந்த அண்ணாவிமார்களுக்கு பாராட்டு கௌரவமளித்தார்.

1964 இல் இவர் எழுதிய ''மட்டக்களப்பு தமிழகம்'' என்ற நூல் இவரது பணிக்கு சிகரம் வைத்தது.

இலக்கிய, சமூக, சமய வாழ்வில் இத்தகைய தம்பதிகளை காண்பது அரிது. இலங்கையிலுள்ள ஒரேயொரு இத் தம்பதிகள் இவர்கள் தான். இது இறைவன் கொடுத்த வரம் என்றார்.

''இலக்கியமணி'' பட்டம் பெற்ற பண்டிதை கங்கேஸ்வரி கந்தையாவிற்கு திருமதி சுபா சக்கரவர்த்தி பாராட்டுரை வழங்குகையில்,

பெண்கள் சகலரும்பெருமை தேடிக் கொள்வதில்லை. ஆனால் சில பெண்கள் பெருமை தேடித்தருகிறார்கள். இதில் திருமதி கங்கேஸ்வரி கந்தையா முக்கியத்துவம் பெறுகிறார்.

இவரது ஆசிரிய சேவையின் கனிகளாக விளங்கும் இவரது மாணவர்களிடம் காண்கிறோம்.

சிறந்த பேச்சாளர், எழுத்தாளர், சமய, சமூக சேவையாளர், குடும்ப பெண்மணி, கணவணின் சுகயீனம் காரணமாக இவரது, மேடைப்பேச்சுக்கள் இன்று கேட்கும் வாய்ப்புகள் இல்லை. இது கவலைக்குரியது என்றார்.

'தத்துவசிரோன்மணி' பட்டம் பெற்ற கல்விமான் கே. கணபதிப்பிள்ளைக்கு திரு. ம. சிவநேசராசா பாராட்டுரை வழங்குகையில்,

இலக்கியத்துறையில் மட்டுமல்ல கலை, விஞ்ஞானதுறைகளிலும் ஈடுபாடுகொண்டவர்.

தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருத மொழிகளை நன்றாக கற்றவர்.

தமிழ், ஆங்கில இலக்கியங்களிலும் பற்றுடையவர். சிறந்த புவியியல் ஆராய்ச்சியாளரான இவர் தனதுசேவையில் ஓய்வு பெற்ற பின்பு மேல்நாட்டு தத்துவ ஞானிகளின் கருத்துக்களை தனது கருத்துக்களுடன் இணைந்து பல படைப்புகள் உருவாக்கியுள்ளார் என்றார்.

பிரதம அதிதியாக அரச அதிபர் திரு. ஆர். யோகநாதன். சிறப்பு விருந்தினராக வட–கிழக்குமாகாண கலாசார பிரதிபணிப்பாளர் எஸ். எதிர்மன்னசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஜனாப் எம். எம். மஃரூப் கரீம் சிறப்புரையாற்றினார்.

# நலன் புரிச்சங்கம்

(பச்சிலைப்பள்ளி)

பளை உதவி அரசாங்க அதிபர்பிரிவின் கீழ் உள்ள பொதுஸ்தாபனங்களின்ஆலோசனையின் கீழ் 9 ஆம் திகதி புதன் கிழமை உதவி அரசாங்க அதிபரின் தலைமையின் கீழ் நடைபெற இருக்கின்றது. இக்கூட்[illegible] பாளர் திரு. செல்வராசா கலந்து கொள்கின்றார்.


## விற்பனையாகின்றது

குமுதம் ரூ. 7-00 ஆனந்தவிகடன் ரூ. 8-00
இந்தியாருடே தமிழ் ரூ.22-00 ஞானபூமி ரூ. 20-00
ரத்தினபாலா (சிறுவர் சஞ்சிகை) ரூ. 9-50
கல்கி ரூ. 7-50

மற்றும் அனைத்து சஞ்சிகைகளும் விலை குறைக்கப்பட்டுள்ளன.
வியாபாரிகளுக்கு விற்பனை விலையில் இருந்து கழிவுவழங்கப்படும்.
தொடர்பு கொள்ளவும்.

## பூபாலசிங்கம் புத்தகசாலை

யாழ்ப்பாணம்.

B 641

ஷப்றா - உதயன் நடாத்தும்
தமிழர் பாரம்பரிய

## விளையாட்டு விழா

மருதனார் மடத்தில் மாபெரும்
மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவு
விளையாட்டுக் குழுவினரின் அனுசரணையுடன்
நடக்கும் காளைகள் சவாரி காண வாரீர்!

[illegible] வண்டிச் சவாரிப் பிரியர்களுக்கு
நீண்ட இடைவெளியின் பின் மீண்டும்
ஒரு சந்தர்ப்பம்! கண்டு களிக்கத்
தவறாதீர்கள்!!

சுன்னாகம் சந்தை மைதானத்தில்
கலைப் பிரியர்களுக்கு கலை விருந்து

[illegible]

## மாயூரா

உங்கள் தச்சு வேலைகள்
எதுவானாலும்
தரமாகச் செய்துகொள்ளவும்

இரும்பு, உருக்கு
வெல்டிங் வேலைகள்
அனைத்திற்கும்

நியாய விலையில்
வாங்கவும்

கந்தையா
சேல்ஸ் சென்டர்

யாழ்நகரில்
இன்றைய சினிமா

மனோகரா - (யாழ்)
தினசரி 4.45, 7.00, 9.45
சனி. ஞாயிறு
10-30, 2-30. 4-45,
700 & 945
DAVID WARBECK IN
THE HUNTERS
OF THE
GOLDEN COBRA

வெலிங்டன் யாழ்
ரகுமான் - நதியா
தினசரி 4-00, 6-45, 9-30
சனி ஞாயிறு 10-30, 2-30,
6-30, 9-30
நிலவே மலரே
(புதிய பிரதி)
B/859

லிடோ (யாழ்)
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு காலை10-30
2-30 9-30
கமல், ரஜனி, ஸ்ரீதேவி
நடித்த
16 வயனிதிலே
(B/860)

ஹரன் - யாழ்
தினசரி 4·00, 6·45
சனி, ஞாயிறுவிடுமுறை
நாட்களில்
10·30, 2·30, 6·30, 9·30
கமலஹாசன் - சரண்யா
நடித்த
"நாயகன்"
75 நாட்களுக்குமேல் ஓடிய
வெற்றிச் சித்திரம்
(கடைசி வாரம்)
B 887

நியூ சாந்தி (யாழ்)
தினசரி 4.00, 6.45, 9.30
சனி ஞாயிறுவிடுமுறை
நாட்களில்
10:30 2:30, 6:30 10:30
ஜெயசங்கர், முத்துராமன்
லட்சுமி, நாகேஸ் நடித்த
கண்ணன்
வருவான்
(புதிய பிரதி)

வின்ஸர் - யாழ்
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறை
நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
இது நம்ம ஆளு
(புதிய வெளியீடு)

ராஜா (யாழ்)

- உங்கள் தச்சு வேலைகள் எதுவானாலும் தரமாகச் செய்துகொள்ளவும்
- இரும்பு, உருக்கு வெல்டிங் வேலைகள் அனைத்திற்கும்
- தீராந்தி வகைகள் நியாய விலையில் வாங்கவும்

## மாயூரா

தச்சுத் தொழிற்சாலை

ஆலடிச் சந்தி,
மானிப்பாய்.

B/633


## நலன் புரிச்சங்கம்

(பச்சிலைப்பள்ளி)

பளை உதவி அரசாங்க அதிபர்பிரிவின் கீழ் உள்ள பொது ஸ்தாபனங்களின்ஆலோசனையின் கீழ் 9 ஆம் திகதி புதன் கிழமை உதவி அரசாங்க அதிபரின் தலைமையின் கீழ் நடைபெற இருக்கின்றது. இக்கூட் ... பாளர் திரு. செல்வராசா கலந்து கொள்கின்றார்.

... பெற்ற பண்டிதை கங்கேஸ்வரி கந்தையாவிற்கு திருமதி சுபா சக்கரவர்த்தி பாராட்டுரை வழங்குகையில்,

பெண்கள் சகலரும்பெருமை தேடிக் கொள்வதில்லை. ஆனால் சில பெண்கள் பெருமை தேடித்தருகிறார்கள். இதில் திருமதி கங்கேஸ்வரி கந்தையா முக்கியத்துவம் பெறுகிறார்.

இவரது ஆசிரிய சேவையின் ... களாக விளங்கும் இவரது மாணவர்களிடம் காண்கிறோம்.


## கந்தையா
## சேல்ஸ் சென்ரர்

புதிய இல. 157, K. K. S. வீதி,
யாழ்ப்பாணம்.

எம்மிடம் தரமான அப்பியாசக்கொப்பிகள் மொனிற்றஸ் கொப்பிகள், பாடசாலை உபகரணங்கள், அச்சகத்திற்குத் தேவையான பேப்பர்வகைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மற்றும் இடங்களிலும் பா...க மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

B/636

## விளையாட்டு விழா

மருதனார் மடத்தில் மாபெரும்
மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவு
விளையாட்டுக் குழுவினரின் அனுசரணையுடன்
நடக்கும் காளைகள் சவாரி காண வாரீர்!

நீண்ட இடைவெளியின் பின் மீண்டும்
ஒரு சந்தர்ப்பம்! கண்டு களிக்கத்
தவறாதீர்கள்!!

சுன்னாகம் சந்தை மைதானத்தில்
கலைப் பிரியர்களுக்கு கலை விருந்து

ரா ?ன் இசைக் குழுவினரின்

## 'இதய கீதங்கள்'

விசேட இன்னிசை நிகழ்ச்சி

காலம்: 10. 5. 1990 வியாழக்கிழமை
மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி
நேரம்: பிற்பகல் 2-00 மணி

கலை நிகழ்ச்சிகள் மாலை 6மணி

(B.639)

சனி ஞாயிறுவிடுமுறை
நாட்களில்
10:30 2:30, 6:30 10:30
ஜெயசங்கர், முத்துராமன்
லட்சுமி, நாகேஸ் நடித்த
**கண்ணன் வருவான்**
(புதிய பிரதி)

**வின்ஸர் - யாழ்**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறை
நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
**இது நம்ம ஆளு**
(புதிய வெளியீடு)

**ராஜா (யாழ்)**
150ஆவது நாளைநோக்கி
வெற்றிநடை போடுகிறது
தினசரி 4.00, 6.45, 9.50
சனி ஞாயிறு விடுமுறை
நாட்களில்
10.30, 2.30, 6.30, 10.30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
**ராஜாதி ராஜா**
(கலர்)
நாளை முதல்
மூன்றுமுடிச்சு
அடுத்த வாரம்
மௌனராகம்

மானிப்பாயில் புகழ்பெற்ற மரக்காலை

## சந்திரன் மரக்காலை

உங்கள் அரிவுவேலை எதுவானாலும்
குறைந்த செலவில் குறித்த நேரத்தில்
செய்து கொள்ளவும்,

மற்றும்

மரங்கள், தீராந்தி வகைகள்.
பலகைகள் வாங்கவும், விற்கவும்
நவநாகரிக தளபாடங்களை
செய்துகொள்ளவும்

நாடுங்கள்

# சந்திரன் மரக்காலை

ஆலடிச் சந்தி, மானிப்பாய்.

(B-635)

# இரு ஜேர்மனிகளையும் இணைக்க உடன்பாடு

# ஆனால் நேட்டோவில் சேர ரஷ்யா ஆட்சேபம்

(பொன்)

இரண்டு ஜேர்மனிகளையும் விரைவில் ஒருங்கிணைய வேண்டும் என்ற உடன்பாட்டுடன் பொன் பேச்சுக்கள் முடிவடைந்தன.

இரண்டாம் உலகப்போரில் வெற்றி அடைந்த நான்கு நேச நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களும் இரண்டு ஜேர்மனியின் வெளியுறவு அமைச்சர்களும் கலந்து கொண்ட இப்பேச்சு வார்த்தையில் ஜேர்மன் ஒன்றிணைவதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு என்பது ஏற்கப்பட்டது

ஆனால் ஒன்றுபட்ட ஜேர்மனி நேட்டோ அமைப்பில் சேரவேண்டுமா அல்லது நடுநிலையாக இருக்கவேண்டுமா என்பது குறித்து கருத்துவேறுபாடுகள் நிலவின.

அதே வேளை சோவியத் யூனியன் தான் தோல்வி அடைந்து விட்டதாக நினைத்துக் கொள்ளாத வகையில் நேட்டோ அமைப்பில் ஜேர்மனி சேர வேண்டுமென்ற கருத்தும் வலுவாக காணப்பட்டது.

பொதுவில் இம்மகா நாடு பற்றிக் கூறிய அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் ஜேம்ஸ் பேகர் ஜேர்மனியை வழிகாட்டும் ஒன்றாகவே இம்மகாநாடு இருக்க வேண்டுமே தவிர அதனை கட்டுப்படுத்தும் முறையில் இருக்கக் கூடாதென குறிப்பிட்டார்.

போலந்தின் எல்லைப்பகுதியின் பாதுகாப்பிற்கு உறுதி வழங்கப்பட்டுள்ளதாக இதில் கலந்து கொண்ட ஜேர்மனி தவிர்ந்த ஏனைய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களும் கூறினார்கள்.

இதே வேளை ஒன்றுபட்ட ஜேர்மனி நேட்டோவுடன் சேர்ந்தால் அது கிழக்கைரோப்பாவின் ராணுவ சமநிலையை சீர்குலைத்து விடுமென சோவியத் யூனியனின் வெளியுறவு துறை அமைச்சர் எட்வேட் சேவர்நாட்சே கூறினார்.

# ஆக்கிரமித்த பகுதிகளில் இஸ்ரேலியர் துப்பாக்கிச் சூடு!

## பலஸ்தீனியர் ஒருவர் பலி! 17 பேர் காயம்

(ஜெருசலேம்)

இஸ்ரேலியர் ஆக்கிரமிப்புக்குள்ளான பலஸ்தீனப் பகுதியில் இஸ்ரேலியத் துருப்புக்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் சொல்லப்பட்டார். 17 க்கும் அதிகமானோர் காயப்பட்டனர். வெஸ்ட் பாங், காஸா திட்டு ஆகிய இடங்களில் நடந்த மோதல்களின் போதே மேற்படி இழப்புக்கள் ஏற்பட்டன.

வெஸ்ட்பாங் அகதிகள் முகாமைச் சேர்ந்த முகமெட் சேக்கர் (வயது 25) என்பவரே நெஞ்சில் சூடுபட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுக் காலமானார். இஸ்ரேலிய இராணுவம் இது தொடர்பாக விசாரணையை மேற்கொண்டுள்ளது என்றாலும், வெஸ்ட்பாங் அகதிகள் முகாமில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இளைஞருக்கும், இராணுவத்தினருக்குமிடையில் ஏற்பட்ட மோதல்களின்போது மேலும் மூன்று பேருக்குத் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் ஏற்பட்டிருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேற்கு நகரமான பெத்தலஹேமில் மரக்கறிச் சந்தையில் யாமுட் முகமெட் அல் சாலன் (வயது 20) என்பவர் மீது இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது என்று பலஸ்தீனிய வட்டாரங்கள் தெரிவித்தன. மருத்துவமனையில் இவர் நிலை கவலைக்கிடமாக உள்ளதாம்.

முகமூடி அணிந்த 100 இளைஞர்கள் காஸா நகரில் இராணுவத்தினர் மீது கற்களை வீசியுள்ளனர். இவர்களைக் கலைபபதற்காக இராணுவத்தினர் ரப்பர் ரவைகளைப் பாவித்துள்ளனர். ஆஸ்பத்திரி வட்டாரங்களின் படி 7 பேர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர். 6 பேருக்கு அடி காயங்கள்.

காஸா கடற்கரையோரமாகவுள்ள ஜபலயா அகதி முகாமில் தான் ஏப்ரல் 26 இல் கலகங்கள் தலைதூக்கின. இப் பகுதியில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு இன்றுவரை அமுலில் உள்ளது.

# போத்தா ஆளும் கட்சியில் இருந்து விலகுவார்

(ஜொகனஸ்பேர்க்)

தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பி டபிள்யூ போத்தா ஆளும் கட்சியிலிருந்து விலகப் போவதாக அறிவித்துள்ளார்.

தற்போதைய ஜனாதிபதி கிளார்க்கின் இன ஒதுக்கல் சம்பந்தமான சீர்திருத்த கொள்கைக்கு எதிர்ப்புத்தெரிவித்தே அவர் ஆளும் தேசிய கட்சியில் இருந்துவிலகப்போவதாக தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி பி. கிளார்க் தலைமையிலான ஆளும் கட்சியின் தலைமைப்பீடத்துடனான கருத்து வேறுபாடு காரணமாகவே தாம் இந்த முடிவை எடுத்திருப்பதாக செய்தியாளர் மத்தியில் அவர் கூறினார்.

இன ஒதுக்கல் தொடர்பான சீர்திருத்தகொள்கையை திரு. போத்தா தவறாகப் புரிந்து கொண்டுள்ளார் என ஜனாதிபதி கிளார்க் தெரிவித்துள்ளார்.

## மாலைதீவில்

# திருக்குர் ஆன் கதைகள் நூலுக்குத் தடை

(மாலி)

விரிவுரையாளரும், பத்திரிகையாளருமான யூசுப் சித்தீக் திருக்குர் ஆன் கதைகள் அடங்கிய புத்தகமொன்றைப் பாட விளக்கங்களுடன் வெளியிட்டுள்ளார். இந் நூலுக்கு மாலைதீவு அரசாங்கம் தடை விதித்துள்ளது.

பெல்ஜியத்தில் பதிப்பிக்கப்பட்டிருக்கும் இந் நூலின் ஆசிரியர் பாரிசில் வாழ்ந்து வருகிறார் இவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர் என்பதை மாலைதீவுச் செய்தி அறிக்கையில் வெளியிடவில்லை.

## பாகிஸ்தான்

# ரயிலில் குண்டு வெடித்து 20 பேர் பலி! பலர் படுகாயம்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் நேற்று கடுகதி ரயிலில் வைக்கப்பட்ட குண்டு ஒன்று வெடித்ததால் இருபது பயணிகள் ஸ்தலத்தில் கொல்லப்பட்டனர். ஐம்பது பேர் வரை படுகாயம் அடைந்தனர்.

ராவில்பிண்டியிலிருந்து கராச்சிக்கு வந்துகொண்டிருந்த ரயில் பெட்டியில் உள்ள மலசல கூடத்தில் இந்தக் குண்டு வைக்கப்பட்டிருந்தது.

சம்பவம் நடைபெற்ற போது ரயில் பெட்டி சுக்குநூறாகியதுடன் பல பயணிகளும் தூக்கி வீசப்பட்டனர்.

## உதவி வைத்திய அதிகாரிகள்

# பரீட்சைக்குத் தோற்றாது பதிவு செய்து கொள்ளலாம்

(கொழும்பு)

உதவி வைத்திய அதிகாரிகள் (ஏ. எம். பி) இனிமேல் பரீட்சைக்கு தோற்றாது பதிவு செய்து கொள்ள முடியும் என்று பேராசிரியர் குணரத்தினா தலைமையிலான குழு அரசாங்கத்துக்கு சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உதவி வைத்திய அதிகாரிகள் (ஏ. எம். பி), பதிவு செய்யப்பட்ட மருத்துவ அதிகாரிகள் (ஆர். எம். பி) தொடர்பான விடயங்களை ஆராய இந்தக் குழுவை சுகாதார அமைச்சு நியமித்திருந்தது.

இந்தக் குழு பல சிபார்சுகளை அரசாங்கத்துக்கு தெரிவித்துள்ளது.

# நிந்தவூரில் அம்புலன்ஸ் இன்றி நோயாளர்கள் பெரும் அவதி

(நிந்தாவூர்)

நிந்தவூர் அரசினர் ஆஸ்பத்திரியில் அம்புலன்ஸ் வண்டி ஒன்று இல்லாததால் அவசர தேவைகளின் போது பெரும் சிரமங்கள் ஏற்பட்டு வருகின்றது.

அம்புலன்ஸ் வண்டி ஒன்று இங்கு இல்லாததால் அவசர நோயாளர்களை அம்பாறை, கல்முனை, மட்டக்களப்பு போன்ற இடங்களில் உள்ள பெரிய ஆஸ்பத்திரிகளுக்கு இங்கிருந்து அனுப்பி வைப்பதில் வைத்திய அதிகாரிகள்

இது குறித்து சுகாதார அமைச்சுக்கு பல தடவைகள் அறிவிக்கப்பட்டும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்க வில்லை என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன (53)

# பியூபெலோ மாலுமிகளுக்கு பதக்கம் வழங்கிக் கௌரவிப்பு

(கலிபோர்ணியா)

அமெரிக்காவின் வேவுபார்க்கும் கப்பலான பியூபெலோவின் மாலுமிகளுக்கு 22 வருடங்களுக்குப் பிறகு யுத்தக் கைதிகளுக்கு வழங்கப்படும்

குள் புகுந்து இக்கப்பலைவேவு பார்[illegible]தென்று தென் கொரியா கப்பலைப் பிடித்தது. மாலுமிகளைச் சிறை வைத்தது. தென் கொரியா நீர்மூழ்கிக் கப்பல்களையும்,

### பலம் வாய்ந்த இந்தியாவால் முடியாததை...

(கொழும்பு)

'ஆயுத பலம் வாய்ந்த இந்தியாவினால்கூட வடக்குக் கிழக்குப் பகுதிகளில் அமைதியை ஏற்படுத்த முடியவில்லை. நாம் பேச்சுவார்த்தை மூலம் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையினாலும் வடக்குக் கிழக்கில் அமைதியை ஏற்படுத்தியிருக்கிறோம்'.

இவ்வாறு ஜனாதிபதி பிரேமதாசா பேருவளையில் நடந்த ஒரு வைபவத்தில்பேசுகையில் தெரிவித்தார்.

## காஷ்மீர் எல்லையில் ஆயுதங்கள் மீட்பு

(ஸ்ரீநகர்)

காஷ்மீரில் எல்லைப்பகுதியில் ஐந்து கிலோ மீற்றர் தூரத்துக்கு குத் பாடாவுக்கு அருகே நேற்று ஏராளமான ஆயுதங்களும் வெடிமருந்துகளும் ஆயுதப்படைகள் நடத்திய சோதனையின் போது கைப்பற்றப்பட்டன.

## நேபாளத்துக்கு புதிய அரசமைப்பு

(காட்மாண்டு)

நேபாளத்தில் புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கு ஆணைக்குழுவொன்று இவ் வாரம் நியமிக்கப்படவிருக்கிறது.

மன்னரின் அதிகாரத்தைக் குறைப்பது, பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கு புதிய அரசியலமைப்பில் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் நேபாள பிரதமர் திரு. கட்டாறி தெரிவித்தார்.

## 'சிவப்பணிச்செம்மல்' பட்டம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்ற தலைவர் திரு ம. சிவநேசராசாவிற்கு '' சிவப்பணிச் செம்மல் என்ற பட்டமளிக்கப்பட்டது.

அண்மையில் ஆனைப்பந்தி ஸ்ரீசித்தி விக்னேஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவத்தில் மாநகர சபையினால் மேற்படி பட்டமும் கௌரவமும் வழங்கப்பட்டது. (37)

# மக்களின் உணர்ச்சிகளை எந்த சக்தியும் அழிக்கமுடியாது

(அச்சுவேலி)

''தமிழீழ மக்களின் விடுதலை உணர்வை எந்தசக்தியாலும் அடக்கி ஒடுக்கி அழிக்க முடியாது. நிச்சயம் தமிழ்இனம் விடுதலை பெற்ற ஓர்இனமாக வாழும். தலைவர் பிரபாகரனின் தலைமை தமிழ்இனத்தின் விடுதலையை நிச்சயம் பெற்றுத்தரும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கலை கலாசாரப் பிரிவு தயாரித்த களத்தில் காத்தான் நாடகம் அச்சுவேலி நாவற்காடு கந்தசாமி கோயிலடி மைதானத்தில் நடைபெற்றபோது உரையாற்றிய திரு கே, பேரின்பநாயகம் கூறினார்.

யாழ் மாவட்டத்தில் முதற்தடவையாக மேடையேற்றப்பட்ட களத்தில் காத்தான் நாடக ஆரம்ப விழா திரு து துரைசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

திரு. பேரின்பநாயகம் தொடர்ந்து உரையாற்றும்

டன.

வெஸ்ட்பாங் அகதிகள்

...பட்ட மோதல்களின்போது

தெரிவித்தன. மருத்துவ மனையில் இவர் நிலை கவலைக்கிடமாக உள்ளதாம்.

முகமூடி அணிந்த 100 இளைஞர்கள் காஸா நகரில் இராணுவத்தினர் மீது கற்களை வீசியுள்ளனர். இவர்களைக் கலைப்பதற்காக இராணுவத்தினர் ரப்பர் ரவைகளைப் பாவித்துள்ளனர். ஆஸ்பத்திரி வட்டாரங்களின் படி 7 பேர் காயங்களுக்குள்ளாயினர். 6 பேருக்கு அடி காயங்கள்.

காஸா கடற்கரையோர மாகவுள்ள ஜபலயா அகதி முகாமில் தான் ஏப்ரல் 26 இல் கலகங்கள் தலைதூக்கின. இப் பகுதியில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு இன்று வரை அமுலில் உள்ளது.

இஸ்லாமியருக்கும் யூதர்களுக்கும் பொதுவான யோசப் கல்லறையில் சமய வழிபாட்டைச் செய்வதற்காக 1,20,000 முஸ்லிம் அகதிகள் தமது வீடுகளில் தடுத்து வைக்கப்பட்டனர். இதைத் தொடர்ந்தே கலகங்கள் வெடித்தன.

# போத்தா ஆளும் கட்சியில் இருந்து விலகுவார்

(ஜொகனஸ்பேர்க்)

தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பி டபிள்யூ போத்தா ஆளும் கட்சியிலிருந்து விலகப் போவதாக அறிவித்துள்ளார்.

தற்போதைய ஜனாதிபதி கிளார்க்கின் இன ஒதுக்கல் சம்பந்தமான சீர்திருத்த கொள்கைக்கு எதிர்ப்புத்தெரிவித்தே அவர் ஆளும் தேசிய கட்சியில் இருந்துவிலகப்போவதாக தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி பி. கிளார்க் தலைமையிலான ஆளும் கட்சியின் தலைமைப்பீடத்துடனான கருத்து வேறுபாடு காரணமாகவே தாம் இந்த முடிவை எடுத்திருப்பதாக செய்தியாளர் மத்தியில் அவர் கூறினார்.

இன ஒதுக்கல் தொடர்பான சீர்திருத்தகொள்கையை திரு. போத்தா தவறாகப் புரிந்து கொண்டுள்ளார் என ஜனாதிபதி கிளார்க் தெரிவித்துள்ளார்.

# தீவுப்பகுதி குடிநீர் பிரச்சினைக்கு தீர்வுகாண நடவடிக்கை

(தீவுப்பகுதி)

தீவுப்பகுதி மக்களின் குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்குவது எப்படி என்பது பற்றிய மாநாடொன்று வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வேலணை உதவி அரச அதிபர் திரு. கே. சபாபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பல உயர்அதிகாரிகள் கலந்துகொண்டனர். தீவுப் பகுதி மக்களின் குடிநீர்த்தட்டுப்பாட்டை நீக்க நீண்டகால திட்டங்கள் முன்வைக்கப்பட்டன.

இத் திட்டத்தில் கடல்நீரை நன்னீராகமாற்றி விநியோகிக்கும் திட்டமும், வன்னிப்பகுதி குளங்களிலிருந்தும் நிலாவரை போன்ற இடங்களிலிருந்தும் நீரைப்பெற்று விநியோகிக்கும் திட்டங்களும் முன்வைக்கப்பட்டு ஆலோசிக்கப்பட்டது.

தற்போதைய நிலையில் வேலணையில் இருந்தே தண்ணீரைப் பெற்று விநியோகிப்பதெனவும் நன்னீரைஒழுங்காக விநியோகிக்கப்படுகின்றதா என்பது கண்காணிக்கப்படுமென்றும் கூறப்பட்டது. (15)

# நிந்தவூரில் அம்புலன்ஸ் இன்றி நோயாளர்கள் பெரும் அவதி

(நிந்தாவூர்)

நிந்தவூர் அரசினர் ஆஸ்பத்திரியில் அம்புலன்ஸ் வண்டி ஒன்று இல்லாததால் அவசர தேவைகளின் போது பெரும் சிரமங்கள் ஏற்பட்டு வருகின்றது.

அம்புலன்ஸ் வண்டி ஒன்று இங்கு இல்லாததால் அவசர நோயாளர்களை அம்பாறை, கல்முனை, மட்டக்களப்பு போன்ற இடங்களில் உள்ள பெரிய ஆஸ்பத்திரிகளுக்கு இங்கிருந்து அனுப்பி வைப்பதில் வைத்திய அதிகாரிகள் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

அத்துடன் வறிய மக்கள் தனியார் வாகனங்களுக்கு கூடிய தொகை கொடுத்து நோயாளர்களை எடுத்துச் செல்ல வேண்டிய பரிதாப நிலையும் நீடித்து வருகின்றது.

இது குறித்து சுகாதார அமைச்சுக்கு பல தடவைகள் அறிவிக்கப்பட்டும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன (53)

# நிந்தவூர் பொதுச்சந்தையில் எந்நேரமும் துர்நாற்றம்

(நிந்தவூர்)

நிந்தவூர் பொதுச்சந்தைப் பகுதியின் சுகாதாரச் சீர்கேடுகள் குறித்து பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தினமும் பொதுமக்கள் கூடும் பொதுச்சந்தைப் பகுதியில் குப்பை, கூழங்கள் ஒழுங்காக அகற்றப்படாமல், குவிந்து கிடப்பதை அவதானிக்க முடிகின்றது.

குறிப்பாக விற்பனைக்கென கொண்டு வரப்படும் மீன் கழிவுகளும் இறைச்சிக்காக அறுக்கப்படும் மாடுகளின் கழிவு எலும்புகளும், பொதுச் சந்தைக்கு அருகிலுள்ள வயல் பகுதியில் கொட்டப்படுவதால் எந்நேரமும் துர்நாற்ற வாடை வீசிய வண்ணமே இருக்கின்றது.

இதனால் அயல் பகுதிகளில் குடியிருக்கும் குடியிருப்பாளர்கள் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாவதுடன், பொதுச் சந்தைக்கு பொருட்கள் வாங்கவரும் பொது மக்களும் சிரமமடைகின்றனர்.

பொதுச் சந்தையைக் குத்தகைக்குப் பெற்றிருப்பவரின் அசமந்தம் காரணமாகவே சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்பட்டு வருவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

பொதுச் சந்தைக்குப் பொறுப்பான நிந்தவூர் ஜும்மா பள்ளிவாசல் நிருவாகமும், பொதுச் சுகாதாரப் பரிசோதகரும் இது விடயத்தில் தக்க நடவடிக்கை எடுத்து சுகாதாரச் சீர்கேடு நீங்க ஆவன செய்ய வேண்டும் என பொதுமக்கள் கோரி உள்ளனர். (53)

# பியூபெலோ மாலுமிகளுக்கு பதக்கம் வழங்கிக் கௌரவிப்பு

(கலிபோர்ணியா)

அமெரிக்காவின் வேவுபார்க்கும் கப்பலான பியூபெலோவின் மாலுமிகளுக்கு 22 வருடங்களுக்குப் பிறகு யுத்தக் கைதிகளுக்கு வழங்கப்படும் பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

பியூபெலோ கப்பலை எதிரிகளின் கையில்சிக்க வைத்தார் என்ற குற்றத்திற்காக இராணுவ நீதிமன்றத்தினால் விசாரிக்கப்பட்டுத் தண்டிக்கப்படவிருந்த கப்பலின் தலைவர் லொயிட் பச்சருக்கும் ஏனையமாலுமிகளுக்கும்க. நந்த சனியன்று பதக்கங்கள் வழங்கப்பட்டன.

1968 ஆம் ஆண்டில் வட கொரியாவின் கடலெல்லைக்குள் புகுந்து இக்கப்பலைவேவு பார்த்ததென்று தென் கொரியா கப்பலைப் பிடித்தது. மாலுமிகளைச் சிறை வைத்தது. தென் கொரியா நீர்மூழ்கிக் கப்பல்களையும், சோவியத் தயாரிப்பான மிக் விமானங்களையும் கொண்டு பியூபெலோவைத் தாக்கியது. மாலுமி ஒருவர் கொல்லப்பட்டார்.

கப்பலோடு மாலுமிகளையும் கைது செய்த தென் கொரிய அரசாங்கம் மாலுமிகளையும், கப்பற் தலைவர்களையும் சித்திரவதை செய்தது கப்பற் தலைவர் தென் கொரியாவில் சித்திரவதைக்குள்ளானதைக் கருத்தில் கொண்டு அவருக்கு இராணுவ நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பைப் பசுபிக்பிராந்திய கப்பற் படைத் தளபதி குறைத்தார். 1969ல் மாலுமிகளும், தலைவனும் தென் கொரியர்களின் கையில் சித்திரவதைக்கு உள்ளானார்கள் என்பதால் பென்ரக்கன் வழங்கப்பட்ட தீர்ப்பைத் தள்ளியது.

நீண்ட 22 வருட கால இழுபறிக்குப்பிறகு பியூபெலோ கப்பல் தளபதிக்கும் மாலுமிகளுக்கும் யுத்தக் கைதிகளுக்கான பதக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

# "சைவநீதி" சமய பத்திரிகை

(பருத்தித்துறை)

இலங்கைச் சைவமன்றம் "சைவநீதி" என்னும் சமயப் பத்திரிகை ஒன்றை வெளியிட உள்ளது

இன்றைய நிலையில் சமயப் பத்திரிகை சமுதாயத்திற்கு மிகுந்த பயனைக் கொடுக்கும் என்பதை கருத்திற்கொண்டே இலங்கைச் சைவ மன்றம் "சைவநீதி" பத்திரிகையை வெளியிடுகின்றதெனத் தெரிவிக்கப்பட்டது. (25)

...விடுதலை பெற்ற ஓர் இனமாக வாழும். தலைவர் பிரபாகரனின் தலைமை தமிழ்இனத்தின் விடுதலையை நிச்சயம் பெற்றுத்தரும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கலை கலாசாரப் பிரிவு தயாரித்த களத்தில் காத்தான் நாடகம் அச்சுவேலி நாவற்காடு கந்தசாமி கோயிலடி மைதானத்தில் நடைபெற்றபோது உரையாற்றிய திரு கே. பேரின்பநாயகம் கூறினார்.

யாழ் மாவட்டத்தில் முதற் தடவையாக மேடையேற்றப்பட்ட களத்தில் காத்தான் நாடக ஆரம்ப விழா திருது துரைசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

திரு. பேரின்பநாயகம் தொடர்ந்து உரையாற்றும் போது, தலைவர் பிரபாகரன் தலைமையில் நடைபெறும் தமிழ் இனத்தின் சுதந்திரப் போராட்டம் வெற்றிபெறும். கடந்தஇரண்டு வருடங்களுக்கு மேல் இந்திய இராணுவம் அமைதிப்படை என்றபெயரில் பல அடாவடித்தனங்களைப் புரிந்தது தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டத்தை கொச்சைப்படுத்தி தமிழீழ விடுதலைப் புலிகளை இல்லாமல் அழிக்கமுயன்றது.

விடுதலைக்காகப் போராடி வரும் மக்களின் உணர்ச்சிகளை எந்த ஒரு சக்தியாலும் அழிக்கமுடியாது.

திரு கு. கணேசன் திரு எஸ். சிவசாமி, திரு சு. வைகுந்தநாதன் உட்பட பலர் உரையாற்றினர். தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் அச்சுவேலி பிரிவு பொறுப்பாளர் கருணா குத்துவிளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார். (16)

## "சிகிரியா" கிராமத்தில்

# உல்லாசப் பயணிகளிடம் கொள்ளை! நடவடிக்கை எடுக்க ஜனாதிபதி பணிப்புரை

(கொழும்பு)

உலகில் குகை ஓவியங்களுக்குப் பெயர்போன சிகிரியாக் குன்றையடுத்த 'சிகிரியாக் கிராமம்' என்ற ஹோட்டலில் தங்கியிருந்த மேஜர்மனி உல்லாசப் பயணிகளிடமிருந்து 7 இலட்ச ரூபா பெறுமதியான உடமைகள் கமாண்டோ உடையில் வந்தவர்களால் கொள்ளையடிக்கப்பட்டிருக்கின்றன.

இக்கொள்ளை தொடர்பாக உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸா கட்டளை பிறப்பித்துள்ளார். கொள்ளையர்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சியில் முப்படைப் பிரிவுகளும் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் அதிகாலை ஹோட்டலுக்குள் திடீரெனப் புகுந்த கொள்ளையர் கோஷ்டி, துப்பாக்கிகளைக் காட்டிப் பயமுறுத்தி அவர்களிடமிருந்து கமராக்கள், காசோலைகள், வேறு பெறுமதிமிக்க பொருட்களைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து சிகிரியாப் பொலிசாரும் தீவிர புலன் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

ஏற்கனவே மூன்று வாரங்களுக்கு முன் பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த உல்லாசப் பயணிகளிடம் நடந்த கொள்ளைக்கும் இதற்கும் தொடர்பிருக்கிறதாம். இப்படிப் பாதுகாப்பு வட்டாரங்கள் கருத்துத் தெரிவிக்கின்றன.

## கெவிலியாமடுவில்

# சிங்களப் பாடசாலை வேலைகள் துரிதகதி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட எல்லையிலுள்ள கெவிலியா மடுவில் சிங்களப் பாடசாலை நிர்மாணிப்பு வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

இக்கிராமத்திலுள்ள தமிழ் பாடசாலையில் ஸ்ரீலங்கா இராணுவ முகாம் அமைந்துள்ளது,

இப்பகுதியில் சிங்களக் குடியேற்ற முயற்சிகள் காரணமாகத் தமிழ் கிராமவாசிகள் இடம்பெயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (37)

## மெதடிஸ்த பெண்கள் கல்லூரி

# தமிழ்த்தின போட்டியில் 1ஆம்,2ஆம் இடங்கள்

(பருத்தித்துறை)

கல்வித்திணைக்களத்தால் யாழ்.மாவட்ட ரீதியில் நடாத்தப்பட்ட தமிழ்த்தின விழா போட்டிகளில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை இரண்டுபோட்டிகளில்முதலாம்இடங்களையும் ஒரு போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளது.

மூன்றாம் பிரிவு கிராமிய நடனப்போட்டியிலும் நான்காம் பிரிவு ஆக்ககவிதைப் போட்டியிலும்முதலாம்இடங்களையும் மூன்றாம் பிரிவுஇசைக்குழுநிகழ்ச்சியில் இரண்டாம்இடத்தையும்பெற்றுக் கொண்டது.

இக்கல்லூரி கிராமிய நடனப் போட்டியிலும், இசைக் குழு நிகழ்ச்சியிலும் வெற்றி ஈட்டியமையினால் கல்லூரியின் பாடசாலைஅபிவிருத்திச் சபை கல்லூரியின் நடன ஆசிரியைகளான செல்வி கலாமதி தெய்வநாயகம் திருமதி புவனேஸ்வரி வன்னியசிங்கம் சங்கீத ஆசிரியை திருமதி மங்களா ஸ்ரீதரன் ஆகியோரைப் பாராட்டியுள்ளது. (25)

# தேன் தமிழ் விருந்து

(விசேட நிருபர்)

ஒவ்வொரு மாதமும் நகரங்கள் பிரதான மையங்களில் மாதாந்த தேன் தமிழ் விருந்து நடாத்த உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க இலங்கைக் கிளை தீர்மானித்துள்ளது.

இவற்றில் பங்கு கொள்வோர் உலகத் தமிழ்ப் பண்பாட்டுக் கழக இலங்கை மாநாட்டில் கௌரவிக்கப்பட இருக்கின்றனர்.

இவ்விருந்தில் பங்குகொள்ள விரும்பும் அன்பர்கள் யாழ். புகையிரத நிலைய வீதியிலுள்ள மேற்படி கழகத் தலைமைச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளலாம். முதலாவது தேன் தமிழ் விருந்து யாழ்நகரில் நடைபெற உள்ளது. (21)

# வவுனியாவில் ஊழியர்களுக்கு ஊக்குவிப்பு பணம் இல்லை

(வவுனியா)

அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுவரும் ஊக்குவிப்புப் பணம் வவுனியா பிரதேச சபை ஊழியர்கள் எவருக்கும் இதுவரை வழங்கப்படவில்லை என்று புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேறு அரசாங்க ஊழியர்கள் பலர் இப்பணத்தைப் பெற்றுக்கொண்ட போதிலும் பிரதேச சபை ஊழியர்களுக்கு ஊக்குவிப்புப் பணம் வழங்குவதில் பாரபட்சம் காட்டப்பட்டு வருவதாகவும், குறிப்பிட்ட ஊழியர்களுக்கு இப்பணத்தை வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (தி)

# மில்கோ நிறுவனம் பால் உற்பத்தியை அதிகரிப்பு

(கொழும்பு)

மில்கோ நிறுவனம் மீண்டும் பால் உற்பத்தியை அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

நாட்டு நிலைமைகள் சீராகி வருவதால் கடந்த ஆண்டு ஜனவரி மாதத்தை விட இந்த ஆண்டு ஜனவரியில் பால் உற்பத்தி ஆறுலட்சம் லீற்றராக அதிகரித்துள்ளது.

மில்கோ நிறுவனம் கிளிநொச்சியிலிருந்தும் பாலைக் கொள்வனவு செய்கிறது.

மார்ச்மாதம் ஒன்பதுலட்சம் லீற்றராக பால் உற்பத்தி அதிகரித்துள்ளது.

அடுத்த மாதம்முதல் பால் உற்பத்தியை ஊக்குவிக்க பால் உற்பத்தியாளர்களுக்கு கொடுக்கப்படும் விலை அதிகரிக்கப்படவுள்ளது.

தற்போது ஒருலீற்றர் பால் 6 ரூபாவாக கொள்வனவு செய்யப்படுகிறது. அடுத்த மாதம் முதல் 6 ரூபா 70 சதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

## வவுனியாவில் ஏப்ரலில் 10 விபத்துக்கள்

(வவுனியா)

கடந்த ஏப்ரல் மாதத்தில் வவுனியாமாவட்டத்தில் பத்து வாகன விபத்துக்கள் இடம்பெற்றிருப்பதாக வைத்தியசாலை பொலிஸ் அறிக்கை தெரிவிக்கிறது.

இவ்வாகன விபத்துக்களில் எவரும் பலியாகவில்லை என்றும் பலத்த உடல் காயங்களுக்கு உள்ளானவர்கள் அதிகம் என்றும் அந்த அறிக்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதேசமயம் தற்கொலைகளில் கடந்த மாதம் மட்டும் ஆறுபேர் இறந்துள்ளனர் என்று வைத்தியசாலை பதிவேட்டை ஆதாரம் காட்டித் தெரிவிக்கப்படுகிறது. (தி)

# வவுனியா கச்சேரியிலிருந்து ஒழுங்காக பணம் வருவதில்லை

(வவுனியா)

வவுனியா பஜார் வீதியில் அமைந்துள்ள வவுனியா தெற்கு தமிழ் பிரிவு கூட்டுறவுச் சங்கத்தை மொத்த விற்பனை நிலையமாக மட்டும் அமைப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நடந்த இயக்குனர் சபை கூட்டத்தில் இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சுமார் ஐந்து லட்சம் ரூபாவிற்கு பொருட்கள் கொள்வனவு செய்து மொத்தமாக விற்பனை செய்வதற்கு வவுனியா கூட்டுறவு சங்கங்களின் சமாஜம் முடிவெடுத்துள்ளது.

வவுனியா கச்சேரியிலிருந்து மேற்படி சமாஜத்திற்கு சேர வேண்டிய பணம் அனுப்பி வைக்கப்பட்டபின் இதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

மேற்படி சமாஜத்திற்கு கச்சேரியிலிருந்து பணம் ஒழுங்காக அனுப்பிவைக்கப் படுவதில்லை என்றும் சுமார் இருபது லட்சம் ரூபா கச்சேரியில் தேங்கியிருப்பதாகவும் சமாஜத்துடன் சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (தி)

# வெளிநாடுகளில் இலங்கையர் கட்டாயம் சேமிக்க வேண்டும்

வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்கள் இனிமேல் மாதாந்தம் ஆயிரம் ரூபாவை இலங்கையில் உள்ள வங்கி ஒன்றில் கட்டாயம் சேமிக்கவேண்டும் என்ற புதிய சட்டம் விரைவில் அரசாங்கத்தால் கொண்டுவரப்படவுள்ளது.

இது குறித்து தொழிற்பயிற்சி அமைச்சு தீவிரமாக ஆலோசித்து வருகிறது.

இவ்வாறு செய்யாது மீறி நடக்கும் இலங்கையர்கள் நாடு திரும்பியதும் கைது செய்யப்படுவார்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வெளிநாட்டில் அவர் உழைத்த பணத்துக்கு கணக்கு விபரமும்கேட்கப்படும்

## மட்டக்களப்பு

# மதுறு ஓயாப் பிரதேசத்தில் முதலாவது பாடசாலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மதுறு ஓயாப் பிரதேசத்தில் முதலாவது பாடசாலை அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது,

திகிதென்ன முஸ்லிம் வித்தியாலயம் தான் மேற்படி பாடசாலையாகும்,

இக்கிராமத்தில் 125 முஸ்லிம்கள் காணி பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (37)

# முல்லைத்தீவில் நடைபெற்ற தேனிசை நிகழ்ச்சிகள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 3 ஆம் திகதி தேனிசை செல்லப்பாவின் இன்னிசை நிகழ்ச்சி தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அரசியல் பொறுப்பாளர் திரு. கைலாஸ் அவர்களின் தலைமையில் முல்லைத்தீவில் நடைபெற்றது.

இவ்விழாவில் முல்லைத்தீவு மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் இராணுவப் பொறுப்பாளர் திரு. திவாகர் மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்து உரையாற்றினார்.

இதனை அடுத்து வன்னி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. சந்திரன் முல்லை மாவட்ட மகளிர் படைப் பிரிவு அரசியல் பொறுப்பாளர் செல்வி யாழ். மாவட்ட மகளிர் கலை கலாசாரப் பொறுப்பாளர் சீதா யாழ். மாவட்ட கலை கலாசாரப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரைவன்னி மாவட்ட கலை கலாசாரப் பொறுப்பாளர் திரு. வாசன் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த இன்னிசை நிகழ்ச்சியை அளித்த தேனிசை செல்லப்பாவுக்கு முல்லை மாவட்ட கலை கலாசாரப் பொறுப்பாளர் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

# டிப்போ முகாமையாளர் விபததில் மரணம்

(கிளிநொச்சி)

வடபிராந்திய போக்குவரத்துச்சபை கிளிநொச்சி டிப்போ முகாமையாளர் ஏ. தியாகராஜா கிளிநொச்சியில் இடம்பெற்ற விபத்தில் மரணமானார்.

வேகமாக வந்த வாகனம் ஒன்று இவரை மோதியதாலேயே இந்த மரணம் சம்பவித்தது.

# நினைவு தின வைபவம்


(மட்டக்களப்பு)

மறைந்தஸ்ரீமத் சுவாமி பிரேமாத்மானந்த ஜீ மகராஜ் 30 ஆவது நினைவு நாள் பிரார்த்தனை, அஞ்சலிக் கூட்டம் சென்ற 6ஆம் திகதி விபுலானந்தர் நினைவு மண்டபத்தில் நடைபெற்றது.

இராம கிருஸ்ண மிஷன் குருகுல பழைய மாணவர் மன்றம் ஏற்பாடு செய்துள்ள இவ்வைபவத்திற்கு சுவாமி ஜீவாந்தஜீ தலைமைவகித்தார் (37

## முதலாம் ஆண்டு

# நினைவஞ்சலி



ஆண்டவன் நமக்களிப்பு 30-01-1972

அந்நியனின் அநியாய உயிரழிப்பு 08-05-1989

## செல்வன் யோகசுந்தரம் ஐங்கரன்

(ஜனா)

திதி: 28—04—1990

ஓடி மறைந்தது ஓராண்டு மகனே!
தேடி அலைகின்றோம் தினமும் உன் ஆவியை
மூடி மறைக்க முடியாத உன் நினைவை
பாடி மறைக்க முயலுகின்றோம் முடியவில்லை.
ஆண்டொன்று சென்ற போதும் ஆறுதல்
மனதிலில்லை.

பட்டப்படிப்புக்கள் கல்லூரி ஆதரவிலான

மென்பந்துக் கிரிக்கெட் போட்டித் தொடர்

# விரிவுரையாளர்கள் முன்னணியில்!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கும், பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களுக்குமிடையே நடைபெற்றுவரும்மென்பந்துக் கிரிக்கெட் போட்டித் தொடரில் நடைபெற்ற இரு போட்டிகளிலும் விரிவுரையாளர்கள் வெற்றி பெற்றதன் மூலம், 5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் 2-0 என்ற அடிப்படையில் முன்னணி வகிக்கின்றனர்.

இரண்டாவதுபோட்டிவெள்ளிக்கிழமை மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றபோது விரிவுரையாளர்கள் 23 ஓட்டங்களால் வெற்றியீட்டினர். முதலில் துடுப்பெடுத்தாடிய விரிவுரையாளர்கள் 19 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 87 ஓட்டங்களைப் பெற்றனர். அருள் வேல், ... டங்களை 8 ஓவர்களில் பெற்றுக் கொடுத்தனர். பாலச்சந்திரன் 20 ஓட்டங்களையும் டேவிட் 17 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் கிருபாகரன், அருள்வேல், முரளிதரன் ஆகியோர் முறையே 4, 2, 2 விக்கட்டுக்களைக் கைப்பற்றினர்.

இத்தொடரின் மூன்றாம், நான்காம் போட்டிகள் இம்மாதம் 7 ஆம், 8 ஆம் திகதிகளில் பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# வீதிவிபத்து

## இரவு 7மணி வரையும்

# சுன்னாகம் தபால் நிலையத்தில் முத்திரைகள் பேறலாம்

(சுன்னாகம்)

சுன்னாகம் தபாலகத்தில் காலை 7 மணி முதல் மாலை 7 மணிவரை உள்நாட்டு வெளிநாட்டு தபால்களுக்குரிய முத்திரைகளைப் பொதுமக்கள் பெற்றுக்கொள்ள வசதி செய் ...

இருந்தும் 100 ரூபா பெறுமதியுள்ள முத்திரை விற்பனை தொடர்பாக இதுவரை எதுவித அறிவித்தலும் தலைமைக் காரியாலயத்தில் இருந்து வரவில்லை என்றார். இம் முத்திரை ...

# ஆலயத்துக்கு மண்டபம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு சங்குவேலி அருள்மிகு ஐயனார் ஆலயத்திற்கு புதிதாக மண்டபம் ஒன்றும் மணிக்கூட்டுக் கோபுரமும் அமைக்கப்பட்டுள்ளன.

இப்புதிய மண்டபத்தினால் முன்னர் சிறியதாக தோற்ற ...

கும், பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்களுக்குமிடையேநடைபெற்றுவரும்மென்பந்துக் கிரிக்கெட் போட்டித் தொடரில் நடைபெற்ற இரு போட்டிகளிலும் விரிவுரையாளர்கள் வெற்றி பெற்றதன் மூலம், 5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் 2-0 என்ற அடிப்படையில் முன்னணி வகிக்கின்றனர்.

இரண்டாவதுபோட்டிவெள்ளிக்கிழமை மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றபோது விரிவுரையாளர்கள் 23 ஓட்டங்களால் வெற்றியீட்டினர். முதலில் துடுப்பெடுத்தாடிய விரிவுரையாளர்கள் 19 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 87 ஓட்டங்களைப் பெற்றனர். அருள்வேல், முரளிதரன், அம்பிக்குமார் ஆகியோர் முறையே 26, 21, 13 ஓட்டங்களைப் பெற்றனர். அருள்வேல், முரளிதரன் ஜோடி முதல் விக்கெட்டுக்கு 8·1 ஓவர்களில் 53 ஓட்டங்களைப் பெற்றனர். சிறப்பாகப் பந்து வீசிய மேர்வின் 7 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கல்வி சாரா ஊழியர்கள் 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றனர். ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான பாலச்சந்திரனும், டேவிட்டும் ஜோடி சேர்ந்து முதல் விக்கட்டுக்கு 32 ஓட்டங்களை பகிர்ந்து கொடுத்தனர். பாலச்சந்திரன் 20 ஓட்டங்களையும் டேவிட் 17 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் கிருபாகரன், அருள்வேல், முரளிதரன் ஆகியோர் முறையே 4, 2, 2 விக்கட்டுக்களைக் கைப்பற்றினர்.

இத்தொடரின் மூன்றாம், நான்காம் போட்டிகள் இம்மாதம் 7 ஆம், 8 ஆம் திகதிகளில் பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## வீதிவிபத்து அதிகரிப்பு

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணத்தில் வீதி விபத்துக்கள் தினமும் அதிகரித்து வருகின்றன. தற்பொழுது மோட்டார் சைக்கிள் யாழ்ப்பாண நகரத்தில் அதிகரித்து காணப்படுவாதலே இவ் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

குறைந்தது நாள் ஒன்றுக்கு ஆறு, ஏழு என்ற கணக்கில் மக்கள் காயப்பட்டு யாழ் ஆஸ்பத்திரியிலும், தனியார் வைத்திய சாலையிலும் சிகிச்சை பெறுகின்றனர். (43)

...னார். வேகமாக வந்த வாகனம் ஒன்று இவரை மோதியதாலேயே இந்த மரணம் சம்பவித்தது.

...பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரைவன்னி மாவட்ட கலை கலாசாரப் பொறுப்பாளர் திரு. வாசன் ஆகியோரும் உரையாற்றி...

இரவு 7மணி வரையும்

## சுன்னாகம் தபால் நிலையத்தில் முத்திரைகள் பெறலாம்

(சுன்னாகம்)

சுன்னாகம் தபாலகத்தில் காலை 7 மணி முதல் மாலை 7 மணிவரை உள்நாட்டு வெளிநாட்டு தபால்களுக்குரிய முத்திரைகளைப் பொதுமக்கள் பெற்றுக்கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.

நிலைமைகள் சீரடைந்து வருவதால் பொதுமக்களின் வசதி கருதி தபால் கருமபீடங்களின் வேலைநேரங்களையும் அதிகரித்துள்ளதாக சுன்னாகம் பிரதம தபாலதிபர் இ. திருநாவுக்கரசு ஈழநாதத்துக்குத் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் சாதாரண [...]ங்களை இறுதியாகக் கட்டும் நேரத்தையும் மாலை 6 மணிவரை நீடித்துள்ளதால் அதற்கேற்ப நீடிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இதனால் மக்கள் பெரிதும் பயனடைந்து வருகின்றார்கள்.

இருந்தும் 100 ரூபா பெறுமதியுள்ள முத்திரை விற்பனை தொடர்பாக இதுவரை எதுவித அறிவித்தலும் தலைமைக் காரியாலயத்தில் இருந்து வரவில்லை என்றார். இம் முத்திரை விற்பனையிலிருந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

## மாநாடு ஒத்திவைப்பு

(விசேட நிருபர்)

இவ்வருடம் மே மாதம் நடைபெற இருந்தஉலகத்தமிழர் பண்பாட்டு மாநாடுமேலாளர்களின் வருகையின்தாமதத்தால் ஆவணி மாதத்திற்குப் பிற்போடப்பட்டுள்ளது என செயலாளர் திரு. செ. பரமநாதன் தெரிவித்தார். (21)

...இராமகிருஸ்ண மிஷன் குருகுல பழைய மாணவர் மன்றம் ஏற்பாடு செய்துள்ள இவ்வைபவத்திற்கு சுவாமி ஜீவானந்தஜீ தலைமைவகித்தார் (3?)

## ஆலயத்துக்கு மண்டபம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு சங்குவேலி அருள்மிகு ஐயனார் ஆலயத்திற்கு புதிதாக மண்டபம் ஒன்றும் மணிக்கூட்டுக் கோபுரமும் அமைக்கப்பட்டுள்ளன.

இப்புதிய மண்டபத்தினால் முன்னர் சிறியதாக தோற்றமளித்த இவ்வாலயம் இப்போது ஓரளவு பெரிய ஆலயமாக காட்சியளிக்கின்றது.

அத்துடன் பக்தர்கள் எதுவித இடைஞ்சலும் இல்லாமல் நின்று தரிசிக்கக் கூடிய தாகவும் உள்ளது.

மேற்படி மண்டபம் இவ்வாலயத்தின் அயலில் வாழும் நடராசா சரோஜினி குடும்பத்தினராலும் மணிக் கூட்டுக் கோபுரம் ஆலய அர்ச்சகரகிய திரு. இராமையா குடும்பத்தினராலும் அமைத்துக் கொடுக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (22)

ஆண்டவன் நமக்களிப்பு 30-01-1972 | அந்நியனின் அநியாய உயிரழிப்பு 08-05-1989

## செல்வன் யோகசுந்தரம் ஐங்கரன்

(ஜனா)

திதி: 28—04—1990

ஓடி மறைந்தது ஓராண்டு மகனே!
தேடி அலைகின்றோம் தினமும் உன் ஆவியை
மூடி மறைக்க முடியாத உன் நினைவை
பாடி மறைக்க முயலுகின்றோம் முடியவில்லை.
ஆண்டொன்று சென்ற போதும் ஆறுதல் மனதிலில்லை.

அருமையாய் வளர்த்திட்ட நம்
ஆண் மகன் கதையே சோகம்.
அமைதியின் பெயரைச் சொல்லி
ஆர்ப்பரித்து வந்தார் இங்கு
மனித உயிர்களுக்குச் சற்றே
மதிப்பளிப்பார் என்றிருந்தோம்
மாறாக நடந்த கதை மனதைச்
சுட்டெரிக்குதையோ!

28 04 1990 சனிக்கிழமை அன்று நடைபெற்ற எமது மகனின் ஆண்டுத் திவச வைபவத்தில் கலந்துகொண்டு அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்தும், மதிய உணவிலும் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் எங்கள் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

''யோகஸ்தான்'' அளவெட்டி.

அப்பா, அம்மா அண்ணன்மார்

(R.455)


பாவனையாளர்களே......... உங்கள் இல்லத்திற்குத் தேவையான

✻ பலசரக்கு வகைகள் ✻ பிளாஸ்டிக் - எவர்சில்வர் சாமான்கள்

✻ அலுமினியப் பொருட்கள் ✻ பனம் பொருட்கள்

✻ சாய்ப்புச் சாமான்கள்

மற்றும் சாயவகைகள் அனைத்திற்கும்....

V. S. M. ஸ்ரோர்ஸ்

ஆலடிச் சந்தி, யாழ். வீதி,
மானிப்பாய்.

(B.634)

### சிந்தனைக்கு

மனிதன் தனது இயற்கை உரிமைகளைச் சமூகத்திடம் கையளிப்பது முன்பு இருந்ததையும்விட மோசமாக வருவதற்கு அல்ல; அவற்றைச் சிறப்பாகப் பாதுகாக்கவே.

– பெயின்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 08 - 05 - 90

தொலைபேசி
ஆசிரிய பீடம்: 025-2839 நிர்வாக பீடம்: 2208

## ஜப்பானைப் பார்த்து நாமும்...

"ஈழத்தமிழர் ஒவ்வொருவரும் தம்மிடமுள்ள ஆற்றலை முழுமையாகப் பயன்படுத்தினால் தமிழீழத்தில் பொருளாதாரம் சிறந்து விளங்கும். அது பொருளாதாரத்தில் தென்கிழக்காசியாவில் சிறந்து விளங்கவும் ஏதுவாகும்."

கோண்டாவிலில் நேற்று முன்தினம் நடைபெற்ற பனம் மற்றும் தென்னம் தும்புகளைக்கொண்டு தூரிகை தயாரிக்கும் தொழிற்சாலைத் திறப்புவிழாவில் உரையாற்றிய விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி யாழ். மாவட்ட அமைப்பாளர் ராஜன் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார்.

விடுதலைப் புலிகளின் 'றூட்' என்ற ஆய்வுப்பிரிவு இத் தொழிற்சாலையை ஆரம்பித்திருக்கிறது.

தமிழீழத்தில் கிடைக்கும் மூலவளங்களைப் பயன்படுத்தி கைத்தொழில்களை ஆரம்பித்து நமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதும் பொருளாதாரத்தை விருத்தி செய்வதும் இந்த ஆய்வுப் பிரிவின் திட்டங்களில் ஒன்றாகும்.

சில தினங்களுக்கு முன்னர்தான் ஜப்பான் பிரதமர் கைபூ ஒருநாள் விஜயத்தை மேற்கொண்டு கொழும்புக்கு வந்து திரும்பினார். தொலைக்காட்சியில் பிரதமர் கைபூ கலந்துகொண்ட நிகழ்ச்சிகள் காண்பிக்கப்பட்டபோது பிரதமர் கைபூவைப் பார்த்தவர்கள் அவரது நாடு எவருக்கும் தலைவணங்க வேண்டிய நிலையிலில்லை என்பதை அவரது நடையும் கையசைப்பும் எடுத்துக்காட்டி உணர்த்துவதாக அமைந்திருந்ததை அவதானித்திருக்கலாம்.

இரண்டாவது உலக மகாயுத்தத்தினால் அழிந்து சிதைந்த ஜப்பான் நாடு இன்று பொருளாதாரத்தில் உலக வல்லரசாகத் தலைநிமிர்ந்து நிற்கிறது.

ஜப்பானில் அணுகுண்டு வீசிய அமெரிக்காவுக்கு இன்று உலகச் சந்தையில் சவாலாக நிற்பது ஜப்பான் மட்டுமே!

அழிக்கப்பட்ட தங்கள் நாட்டை உலகிலேயே முன்னணியில் பொருளாதாரத்தில் நிற்கச்செய்ய வேண்டுமென்றும் எந்த நாட்டிடமும் கைகட்டி நிற்கக் கூடாதென்றும் ஜப்பானியர் பூண்ட உறுதியும் வைராக்கியமும் அவர்களது கடும் உழைப்புமே இந்த

# தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசம் - 2

## சில கருத்துக்கள்

கலாநிதி சி. க. சிற்றம்பலம்
தலைவர், வரலாற்றுத்துறை யாழ். பல்கலைக்கழகம்.

நேற்றையத் தொடர்ச்சி...

இத்தகைய அமைப்பு எண்ணிக்கை அளவில் சிங்கள மக்களுக்கு ஆட்சியில் மூன்றில் இரண்டு பலத்தை வழங்குவதை மேலும் உறுதிப்படுத்துவதற்காக அக்காலத்தில் தேர்தலில் தெரிவு செய்யப்படும் 95 பேரைக் கொண்டிருந்த முதல் சுதந்திர பாராளுமன்றத்தில் 7 பிரதிநிதிகளை மட்டுமன்றி, 20 தொகுதிகளிலும் தமது செல்வாக்கை மலைநாட்டில் செலுத்திய இந்தியத் தமிழ் மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது. 1948இல் நிறைவேறிய இந்திய பாகிஸ்தானியர் சட்டங்கள் இவர்கள் பலத்தைக் குறைத்ததோடு, சிங்கள மக்களின் 2/3 பலத்தினை நிரந்தரமாகவும் உறுதி செய்தது. சிங்கள மக்களுக்குப் பெருப்பான்மைப் பலத்தை இத்தகைய சட்டம் இன்னொரு விதத்திலும்அளித்தது. அதாவது தொகுதிகளைக் கணிப்பது ஆட்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலேதான் நடைபெறுவது வழக்கம். வாக்குரிமை இல்லாத இந்தியத் தமிழர் ஆட்தொகைக்கு மட்டும் சேர்க்கப்பட்டு சிங்கள மக்களின் தொகுதிகள் பங்கிடப்பட்டதால் சிங்கள மக்கள் தமது சனத்தொகை விகிதாசாரத்திற்கு (74 வீதம்) மேலாகப் பாராளுமன்றத்தில் கிட்டத்தட்ட (10 வீதம்) அளவில் கூடிய அதிகாரத்தினைப் பெறவும் முடிந்தது.

இத்தகைய பின்னணியில்தான் தமிழ் மக்கள் தாம் இந்நாட்டில் தமது கலாசாரத்தின் தனித்துவத்தைப் பேணி வாழ்வதற்கு மொழி மட்டுமன்றி ஒரு பிரதேசமும் அவசியமென்றும், இத்தகைய பாதுகாப்பை ஒரு சமஷ்டி அமைப்பே தரும் என்றும் 1949இல் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் முன் வைத்தார். இத்தகைய கொள்கையை நியாயப்படுத்த சர்வதேச ரீதியில் சுயநிர்ணய உரிமைக்கு அருகதை உள்ளஇனங்கள் போன்று தமிழ் மக்களும் உளர் என்றார். தமிழ்ப் புத்திஜீவிகளால் முன் வைத்து வளர்க்கப்பட வேண்டிய கருத்தை ஒரு சட்டத்தரணி முன் வைத்து வளர்த்ததால் அவர் ஒருதீர்க்கதரிசிஎன்பதைப்பின்னர் நடைபெற்ற நிகழ்ச்சிகள்

னர் தமிழ்மக்கள் பிரச்சினைக்குப் பரிகாரமாக 1957 ஜூலை மாதம் பண்டார நாயக்கா செல்வநாயகம் ஒப்பந்தம் உருவானதும் வரலாற்று நிகழ்ச்சிகள். இவ் ஒப்பந்தம் பின்னர் பௌத்த பிக்குகளின் தலையீட்டால் கழித்தெறியப்பட்டாலும் கூட தமிழ் மக்களின் பாரம்பரியக் கோட்பாடு மேலும் அரசியல் நிலையில் வலுவுள்ள கோரிக்கையாகி ஸ்திரம் பெற்று வளருவதற்கு வழிவகுத்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தமாகும். சில வரலாற்று ஆசிரியர்கள் தமிழ்த் தலைவர்களால் கட்டி வளர்க்கப்பட்ட தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசம் என்ற ஐதீகத்தை இது அங்கீகரித்துவிட்டது எனவும் விசனித்துள்ளனர். இவ் ஒப்பந்தம் வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழ்மக்களின் பாரம்பரியப் பிரதேசம் என்பதனை அங்கீகரித்த ஒப்பந்தமாகும். சுதந்திர இலங்கையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிப் பிரதமர் ஒருவரை அங்கீகரிக்கப்பட வைத்த மிகமிகக் காத்திரமான ஒப்பந்தம். ஏற்கனவே 1927இல் கண்டியர் வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசம் என்பதனை அங்கீகரித்தாலும் பின்னர் 1931இல் டொனமோர் அறிக்கையில் வடக்கு

கிழக்கு மாகாணங்களை 'தமிழ் மாகாணங்கள்' தமிழர் அதிகமாக வாழும் மாகாணங்கள்' என்ற சொற் பிரயோகங்கள் காணப்பட்டாலும் கூட சுதந்திர இலங்கையின் பிரதமரால் இவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட நிகழ்ச்சி உண்மையிலேயே வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியே இதன் மூலம் சுதந்திரம் பெற்றதன் பின் அசுர வேகத்தில் கிழக்கு மாகாணத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் நடைபெற்ற போதெல்லாம் இவை தமிழ் மக்களின் பாரம்பரியப் பிரதேசத்தைப் பறிப்பதற்கான ஒரு திட்டமிட்ட சதி என்ற கோஷம் கடந்த நாற்பதாண்டுகளாக தமிழ் மக்கள்மனதில்நன்கு வேரூன்றி

பதனை அங்கீகரிக்கவும் வைத்தது.

மேற்கூறியஅங்கீகாரத்தைக் கடந்த நாற்பது ஆண்டுகளில் மாறிமாறிஆட்சிப் பொறுப்பை ஏற்ற இன்னொரு அரசியல் கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியும் அளித்தது. இதன் அன்றைய பிரதமர் டட்லி சேனநாயகாவுடன் தந்தை செல்வநாயகம் அவர்கள் செய்துகொண்ட ஒப்பந்தத்தினால் மற்றுமொரு அங்கீகாரத்தினையும் பெற்றார் அஃதாவது வரலாற்று ஏடுகளில் டட்லி செல்வநாயகம் ஒப்பந்தம் என இடம் பெறும் இவ் ஒப்பந்தத்தில் தமிழ் வடக்கு கிழக்கு மாகாணங்களின் நிர்வாக நீதிமன்ற மொழியாக அங்கீகாரம் பெற்றதோடு குடியேற்றத்தில் முன்னுரிமை இப்பகுதியிலுள்ளோருக்கு அளிக்கப்படவேண்டுமென்பதும்அவ்வாறில்லாதவிடத்து பிற மாகாணங்களிலுள்ள தமிழ் பேசும் மகனுக்கே கொடுக்கப்பட வேண்டும் என்பதுவும் ஏற்கப்பட்டது. பின்வந்த 1972, 1978 ஆம் ஆண்டுஅரசியல் திட்டங்கள் தமிழ் மக்களின் பெரும்பான்மை பிரதிநிதிகளின் சம்பந்தமின்றி ஒரு தலைப்பட்சமாக நிறைவேற்றப்பட்டாலும் கூட வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் நீதிமன்ற நிர்வாகமொழி என்பதனை இவையும் ஏற்றன. சுதந்திர இலங்கை அரசுகளினால் தயாரிக்கப்பட்ட இரு அரசியற்திட்டங்களும் வடக்கு கிழக்கு மாகாணத்தில் வாழும்

பெரும்பான்மையான தமிழ்ப் பிரதிநிதிகளால் அங்கீகரிக்கப் படவில்லை எனலாம். 1976 இல் வடக்கு கிழக்கு மாகாணங்கள் சுதந்திரமுள்ள அரசு என்ற 'தமிழீழத்' தீர்மானம் வட்டுக்கோட்டையில் நிறைவேறுவதற்கும் கால்கோளாக அமைந்ததும், திரு. எஸ். ஜே வி. செல்வநாயகத்தால் முன் வைக்கப்பட்டு பின்னர்சிங்கள மக்களின்ஆட்சி உரிமைபெற்ற இரு கட்சியின் பிரதமர்களாலும் அங்கீகரிக்கப்பட்டதுமான தமிழர் தாயகம் என்ற

வடிவத்தில் முதிர்ச்சியானஒரு வடிவமே தமிழீழக் கோட்பாடு எனலாம்.

துரதிஷ்டவசமாக 1977ஆம் ஆண்டின் பொதுத்தேர்தலுக்குப் பின்னர் தமிழரின் தாயகக் கோட்பாடு சர்வதேச ரீதியில் வலுவடைந்த போது அதனை முறியடிக்க யூ.என்.பி. அரசாங்கமும் அதன் ஆதரவாளர்களான புத்திஜீவிகளும் முன்னின்று பல ஆராய்ச்சி வெளியீடுகளை வெளியிட்டனர். இவ் வெளியீடுகளில் பின்வரும் அம்சங்கள் முக்கியம் பெற்றன.

1. இந் நாட்டின் 74 வீதமாகிய சிங்கள மக்களுக்கே இம் முழு நாடும் சொந்தம். இந் நிலையில் வடக்குகிழக்கு மாகாணங்களில் வாழும் 12.6 வீதம் தமிழ் மக்களுக்கு இந் நாட்டின் விஸ்தீரணத்தில் 30 வீதமான நிலப்பரப்பையும் 2/3 கரையோரப் பகுதியையும் எவ்வாறு அவர்களின் தாயகமாக ஏற்க முடியும்?

2. தமிழருக்கென்றதாயகம் ஒன்றில்லை. கிழக்கு மாகாணத்தில் கூட கரையோரத்திலிருந்து 10 மைல் வரை தான் தமிழர் குடியேற்றங்கள் காணப்பட்டனவென்றும் மிகுதியான கிழக்கு மாகாணப் பகுதிகளில் அங்குமிங்குமாக உள்ள பழைய சிங்களக் குடியேற்றங்களுக்குரிய இடங்களிலும் மனித நடமாட்டமில்லாத இடங்களிலும் காடுகளை அழித்து சிங்களக் குடியேற்றங்களைக்கிழக்கு மாகாணத்தில் அரசு மேற்கொண்டதில் என்ன தவறு என்று கேட்கப்படுகின்றது.

இலங்கையின் மாகாணங்களாக வடக்கு கிழக்கு மாகாணங்கள் 1832 இலும் பின்னர் 1845 இல் மேல் மாகாணமும் 1873இல் வடமத்திய மாகாணமும் 1886, 1889 களில் ஊவா சப்பிரகமுவ மாகாணங்களும் பிரித்தானியரால் ஏற்படுத்தப்பட்டன. இதனால் வடக்கு கிழக்கு மாகாணங்கள் உண்மையிலே இந் நூற்றாண்டின் ஆரம்பத்திற்றான் தற்போதைய வடிவத்தைப் பெற்றது எனலாம். இப் பிராந்தியத்தில் குறிப்பாக வடமாகாணம் 90வீதம் தமிழ் மக்கள் வாழும் பிரதேசமாகும். சர்ச்சைக்குரிய

கிழக்கு மாகாணத்தின் சனத்தொகை மதிப்பீட்டை உற்று நோக்கும்போது இப்பாரம்பரிய பிரதேசம் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தில் எவ்வாறு பறிபோனது என்பதும் புலனாகும்.

இன்று நாட்டில் சிங்களமக்கள்74வீதம்ஆக இன்றுஇருப்பதுபோல் அன்றுதமிழ் மக்கள் கிழக்கு மாகாணத்தில் கடந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்டது.புலனாகிறது. பிரித்தானியர் ஆட்சி 1796 இல் தொடங்கியபோது காணப்பட்ட நிலை இஃதாகும்:

அன்று சிங்கள மக்களின் எண்ணிக்கை கிழக்கு மாகாணத்தில் 0. 53வீதம் தான் தமிழ் மக்களோடு கிழக்கு மாகாணத்தில் ஐரோப்பியர் வருகையோடுஇங்கே செறிந்து பரவிய முஸ்லிம்களின் எண்ணிக்கையான 24. 72 வீதம் சேர்ந்தால் தமிழ்பேசும் மக்கள் தொகை 99. 24 வீதம் என்பதை மறுக்க முடியாது. 1921 இல் தமிழ் மக்கள் சிறுபான்மையினராகிவிட்டதாக எண்ணிய காலத்திற் கூட வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய 5 மாவட்டங்களில் பெரும்பான்மையினராகவே விளங்கினார்கள். சிங்கள மக்களின் எண்ணிக்கை 5% க்குக் குறைவாகவே இக் காலத்தில் கிழக்கு மாகாணத்தில்காணப்பட்டது. சுதந்திரமடைந்த காலகட்டத்தில் 1947 இல் 9.87வீதம் ஆக இருந்த சிங்கள மக்கள் 1957இல் பண்டா செல்வா ஒப்பந்த காலத்தில் 13. 11 வீதம் ஆகி 1965இல் டட்லி செல்வா ஒப்பந்த காலத்தில் 19. 90 வீதம் ஆக உயர்ந்ததும் திட்டமிட்ட வகையில் இப் பிராந்தியத்தின் தமிழ் மக்களின் பெரும்பானமைப் பலத்தினை சகுறைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட சதி இதுவே என்பதனை கடந்த கால குடிமதிப்பீடுகள்விசேடமாக 1291 ஆம் ஆண்டின் பின்னர் காணப்படும் மதிப்பீடுகள் எடுத்துக் காட்டுகின்றன.

(தொடரும்)

## பரந்தன் இரசாயன தொழிற்சாலையின் ஊழியர்களுக்கு தலைவர் பாராட்டு

கலந்துகொண்ட நிகழ்ச்சிகள் காண்பிக்கப்பட்டபோது பிரதமர் கைபூவைப் பார்த்தவர்கள் அவரது நாடு எவருக்கும் தலைவணங்க வேண்டிய நிலையிலில்லை என்பதை அவரது நடையும் கையசைப்பும் எடுத்துக்காட்டி உணர்த்துவதாக அமைந்திருந்ததை அவதானித்திருக்கலாம்.

இரண்டாவது உலக மகாயுத்தத்தினால் அழிந்து சிதைந்த ஜப்பான் நாடு இன்று பொருளாதாரத்தில் உலக வல்லரசாகத் தலைநிமிர்ந்து நிற்கிறது.

ஜப்பானில் அணுகுண்டு வீசிய அமெரிக்காவுக்கு இன்று உலகச் சந்தையில் சவாலாக நிற்பது ஜப்பான் மட்டுமே!

அழிக்கப்பட்ட தங்கள் நாட்டை உலகிலேயே முன்னணியில் பொருளாதாரத்தில் நிற்கச்செய்ய வேண்டுமென்றும் எந்த நாட்டிடமும் கைகட்டி நிற்கக் கூடாதென்றும் ஜப்பானியர் பூண்ட உறுதியும் வைராக்கியமும் அவர்களது கடும் உழைப்புமே இந்த முன்னேற்றத்துக்குக் காரணம்.

இலங்கையில் தமிழீழப் பிரதேசமான வடக்குக் கிழக்கு மாகாணம் முதலில் சிறிலங்கா அரசபடையினாலும் பின்னர் அமைதிப்படை என்று வந்த இந்திய இராணுவத்தாலும் அழித்துச் சிதைக்கப்பட்டதாகும்.

கைத்தொழில்கள், விவசாயம், பெருந்தொழில்கள் பாதிக்கப்பட்டன. உற்பத்தி நிறுத்தப்பட்டன. பொருளாதாரம் சீரழிந்தது.

கடந்த சுமார் இரண்டு மாதங்களாகத் தமிழீழத்தில் அமைதி திரும்பி நிலைமை சீராகியிருக்கிறது.

அவரவர் வீடுகளையும் அவரவர் கட்டிடங்களையும் உதவிநிதி, கடன்நிதி என்று தேடியும் திருத்திக்கொண்டு மீண்டும் தொழில் செய்யத் தொடங்கியிருக்கின்றனர்.

அழிந்து சிதைந்த இடங்களைத் திருத்தி அதே பழைய தொழில்களைச் செய்யவேண்டுமென்ற மனப்பான்மைதான் எல்லோரிடமும் நிலவுகிறது.

புதிய புதிய தொழில்களை ஆரம்பிக்க வேண்டும்; நமது மண்ணைத் தொழில் மயமாக்க வேண்டும் என்ற எண்ணம் தொழிலதிபர்களிடமோ வசதி படைத்தவர்களிடமோ இன்னமும் ஏற்படவில்லை.

தொழிற்புரட்சி ஏற்பட வேண்டும். விவசாயப் புரட்சி ஏற்பட வேண்டுமென்ற உத்வேகம் இன்னமும் எமது மக்கள் மனதில் வேரூன்றுவதற்குத் தயங்குகிறது.

ஒவ்வொரு வீட்டிலும் ஆண்களும் பெண்களும் அந்தந்தப் பகுதியிலுள்ள மூலவளங்களைக்கொண்டு ஏதாவதொரு குடிசைக் கைத்தொழில் செய்ய வேண்டும்.

நமது நாட்டில் இப்படி குடிசைக் கைத்தொழில் மற்றும் சிறுதொழில்களில் ஈடுபடாததால்தான் பெண்களும் ஆண்களும் திண்ணைப் பேச்சு வீரர்களாக வளர்ந்திருக்கிறார்கள்.

இவர்கள்தான் ''மீண்டும் ஒரு தாக்குதல் வரும், மீண்டும் அவர்கள் வந்துவிட்டால் என்ன செய்வது?'' என்ற வதந்திகளைத் தம்மை அறியாமலே பரப்பி உற்சாகத்துடன் உழைக்கத் தொடங்குபவர்களின் உற்சாகத்தையும் கெடுப்பவர்கள்.

வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளவர்கள் உழைத்து கஷ்டப்பட்டு அனுப்பும் பணத்தை மீண்டும் சீதனம் என்ற பெயரில் காணி, கட்டிடங்களாகவும் வங்கியில் வட்டி பெருகுவதற்கும் தேக்கி வைப்பதில் பயனில்லை. வெளிநாட்டிலிருந்து இங்கு வரும் பணம் புதிய புதிய கைத்தொழில்கள், தொழில்களில் மூலதனமாகி உற்பத்தியைப் பெருக்கி நாட்டை வளம் கொழிக்கச் செய்வதாக இருக்க வேண்டும்.

---

தான் தமிழ் மக்கள் நாம் இந் நாட்டில் தமது கலாசாரத்தின் தனித்துவத்தைப் பேணி வாழ்வதற்கு மொழி மட்டுமன்றி ஒரு பிரதேசமும் அவசியமென்றும், இத்தகைய பாதுகாப்பை ஒரு சமஷ்டி அமைப்பே தரும் என்றும் 1949இல் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் முன் வைத்தார். இத்தகைய கொள்கையை நியாயப்படுத்த சர்வதேச ரீதியில் சுயநிர்ணய உரிமைக்கு அருகதை உள்ள இனங்கள் போன்று தமிழ் மக்களும் உளர் என்றார். தமிழ்ப் புத்திஜீவிகளால் முன் வைத்து வளர்க்கப்பட வேண்டிய கருத்தை ஒரு சட்டத்தரணி முன் வைத்து வளர்த்ததால் அவர் ஒருதீர்க்கதரிசிஎன்பதைப்பின்னர் நடைபெற்ற நிகழ்ச்சிகள் எடுத்துக் காட்டின எனலாம்.

1956இல் தனிச் சிங்கள அரசமொழிச் சட்டம் உருவாகியது. இக்காலகட்டத்தில் வடகிழக்கு மாகாணங்களில் ஒரு சிங்களப் பிரதிநிதி கூட இல்லை. இப்பகுதியிலுள்ள தமிழ்பேசும் பிரதிநிதிகள் யாவரும் இச்சட்டத்திற்கு எதிராகவே வாக்களித்ததும் ஈண்டு நினைவுகூரற்பாலது இதனை எதிர்த்து காலிமுகத்தில் அகிம்சை ரீதியில் சத்தியாக்கிரகம் இலங்கை தமிழ் அரசுக் கட்சியால் மேற்கொள்ளப்பட்டதும் தலைவர்கள் கொடூரமாக சிங்களக் காடையரால் தாக்கப்பட்டதும் பின் கிழக்கு மாகாணங்களை 'தமிழ் மாகாணங்கள்' தமிழர் அதிகமாக வாழும் மாகாணங்கள்' என்ற சொற் பிரயோகங்கள் காணப்பட்டாலும் கூட சுதந்திர இலங்கையின் பிரதமரால் இவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட நிகழ்ச்சி உண்மையிலேயே வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியே இதன் மூலம் சுதந்திரம் பெற்றதன் பின் அசுர வேகத்தில் கிழக்கு மாகாணத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் நடைபெற்ற போதெல்லாம் இவை தமிழ் மக்களின் பாரம்பரியப் பிரதேசத்தைப் பறிப்பதற்கான ஒரு திட்டமிட்ட சதி என்ற கோஷம் கடந்த நாற்பதாண்டுகளாக தமிழ் மக்கள் மனதில் நன்கு வேரூன்றி வளருவதற்கும் இதன் மூலம் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசம் பற்றிய உணர்வு நிலைநாட்டப்படுவதற்கும் தமிழ் மக்கள் தங்கள் பிரதேசம் பற்றி விழிப்பாய் இருப்பதற்கும் வழி பிறந்தது. 1961இல் முதல் முதலாக தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசத்தில் அன்றைய இலங்கைத் தமிழரசுக் கட்சியினால் ஒழுங்கு செய்யப்பட்ட சத்தியாக்கிரகப்போராட்டம் ஒரு சிலமாதங்களுக்கு அரசஇயந்திரத்தைச் செயலிழக்கச் செய்ததன் மூலம் வட–கிழக்கு மாகாணங்கள் தமிழ்மக்களின் பாரம்பரியப் பிரதேசம் என் பெரும்பான்மையான தமிழ்ப் பிரதிநிதிகளால் அங்கீகரிக்கப்படவில்லை எனலாம். 1976 இல் வடக்கு கிழக்கு மாகாணங்கள் சுதந்திரமுள்ள அரசு என்ற 'தமிழீழத்' தீர்மானம் வட்டுக்கோட்டையில் நிறைவேறுவதற்கும் கால்கோளாக அமைந்ததும், திரு. எஸ். ஜே வி. செல்வநாயகத்தால் முன் வைக்கப்பட்டு பின்னர்சிங்கள மக்களின்ஆட்சி உரிமைபெற்ற இரு கட்சியின் பிரதமர்களாலும் அங்கீகரிக்கப்பட்டது மான தமிழர் தாயகம் என்ற

ணங்கள் 1832 இலும் பின்னர் 1845 இல் மேல் மாகாணமும் 1873இல் வடமத்திய மாகாணமும் 1886, 1889 களில் ஊவா சப்பிரகமுவ மாகாணங்களும் பிரித்தானியரால் ஏற்படுத்தப்பட்டன. இதனால் வடக்கு கிழக்கு மாகாணங்கள் உண்மையிலே இந் நூற்றாண்டின் ஆரம்பத்திற்றான் தற்போதைய வடிவத்தைப் பெற்றது எனலாம். இப் பிராந்தியத்தில் குறிப்பாக வடமாகாணம் 90வீதம் தமிழ் மக்கள் வாழும் பிரதேசமாகும். சர்ச்சைக்குரிய 13. 11 வீதம் ஆகி 1965இல் டட்லி செல்வா ஒப்பந்த காலத்தில் 19. 90 வீதம் ஆக உயர்ந்ததும் திட்டமிட்ட வகையில் இப் பிராந்தியத்தின் தமிழ் மக்களின் பெரும்பானமைப் பலத்தினை சகுறைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட சதி இதுவே என்பதனை கடந்த கால குடினக் மதிப்பீடுகள்விசேடமாக 1291 ஆம் ஆண்டின் பின்னர் காணப்படும் மதிப்பீடுகள் எடுத்துக் காட்டுகின்றன.

(தொடரும்)

---

# பரந்தன் இரசாயன தொழிற்சாலையின் ஊழியர்களுக்கு தலைவர் பாராட்டு

(கொழும்பு)

பரந்தன்இரசாயனதொழிற்சாலை நவீனமயமாக்கப் படவுள்ளது. அதனையடுத்து அங்கு உற்பத்தி அதிகரிக்கப் பட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும்.

இவ்வாறு பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனத் தலைவர் திரு. உபாலி டீ. சில்வா தெரிவித்துள்ளார்.

அடுத்த இரண்டு வருடங்களில் இதுநவீனமயப் படுத்தப் படுமெனக் கூறிய அவர் கடந்த ஆறு வருடங்களாக இத் தொழிற்சாலை இயங்காததால் 600 லட்சம் ரூபாவுக்கு வருடாந்தம் குளோரின் இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது.

தண்ணீரை நாட்டில் சுத்தமாகவும், ஹொட்டல்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு நீரைச் சுத்தமாக்க 150தொன் குளோரின் தேவைப்படுகிறது.

பரந்தன் தொழிற்சாலை மூலம் தற்போது நாளாந்தம் 5 தொன் குளோரின், ஐதரோக் குளோரிக் அமிலம், நாகக் குளோரைட், பெரிக் குளோரைட், கொஸ்ரிக் சோடா, மேசைஉப்பு உட்பட பன்னிரண்டு உபபொருட்கள் உற்பத்தியாகின்றன.

வடபகுதியில் பல பிரச்சினைகள் நடைபெற்ற போதும் பரந்தன் தொழிற்சாலையில் இருந்த 46 கோடி ரூபா பெறுமதியான பொருட்கள் திருட்டுப்போகவில்லை. மூன்று தடவைகள் திருட்டு முயற்சி இடம்பெற்றது அங்கிருந்த ஊழியர்களின் குடும்பங்கள் அதனைத் தடுத்ததால் இத் திருட்டு நடைபெறவில்லை. இதற்காக இந்த ஊழியர்களுக்கு நன்றி கூற வேண்டும்.

தெற்கில் இப்படி இது இருந்திருந்தால் எல்லாமே நாசமாகியிருக்கும்.

இத் தொழிற்சாலை இயங்குவதால் அரசுக்கு அந்நியச் செலாவணி கிடைக்கும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்

# யாழ். நகர கடைகளில் பாண் விற்பனை சோதனை

யாழ்.நகரில் உள்ள கடைகளில் விற்கப்படும் பாண் குறித்து நேற்று முன் தினம் திடீர் பரிசோதனை நடத்தப் பட்டது.

சில கடைகளில் நிறை, தரம் குறைந்த பாண் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இப்படியான பாணை பேக்கரிகளிலிருந்து வாங்கி விற்கக் கூடாது எனவும் அப்படி விற்பது இனிமேல் கண்டு பிடிக்கப்பட்டால் அபராதம் விதிக்கப்படும் எனவும் எச்சரிக்கப் பட்டனர்.

அண்மையில் யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் நிறை குறைந்த பாண் தயாரிக்க வேண்டாம் என பேக்கரிகளுக்கு அறிவித்தும் சில பேக்கரிகள் நிறை குறைந்த பாண் தயாரிப்பதாக புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன.

# கூட்டுறவுச்சங்கங்கள் பாடசாலைகளில் நிறுவப்படும்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவுக்கு பதிலாக உணவு முத்திரைகள் வழங்க, கல்வியமைச்சு நடவடிக்கையெடுத்துள்ளதையடுத்து பாடசாலைகளில் கூட்டுறவு சங்கக்கடைகள் திறக்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை கல்வி உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத் முதலி மேற் கொண்டுள்ளார்.

இதனால் மாணவர்கள்தமக்குரிய கொப்பி மற்றும் பாடசாலை உபகரணங்களை சுலபமாக பெற்றுக்கொள்ள வசதி ஏற்படும்.

அத்துடன் மாணவர்களுக்கு கூட்டுறவு பற்றி தெரிந்து கொள்ளவும். இது ஒருவாய்ப்பாக அமைகிறது எனவும் அமைச்சர் அத்துலத்முதலி கூறினார்.

இதற்கு பாடசாலை அதிபர்கள் அபிவிருத்திச் சங்கங்களின் உதவிகள்கோரப்பட்டுள்ளன

# அமைச்சர்கள், எம்.பிக்கள் மது அருந்தக் கூடாது

மது அருந்தும், மதுவுக்கு அடிமையாகும் அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது பதவிகளை ராஜினாமா செய்ய வேண்டும் என்று ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா தெரிவித்துள்ளதாக தகவல்துறை ராஜாங்க அமைச்சர் ஏ.ஜே. ரணசிங்கா கூறியுள்ளார்.

கொழும்பில் இடம் பெற்ற மத வைபவம் ஒன்றில் பேசிய அமைச்சர் ரணசிங்கா இத்தகவலை வெளியிட்டார்.

அமைச்சர்கள் எம். பிக்கள் வீடுகளிலும், வைபவங்களிலும் மது அருந்துவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் ஜனாதிபதி தெரிவித்ததாக அவர் மேலும் சொன்னார்.

---

## மக்கள் மடல்

# 125 பட்டதாரிகளின் நிலை

ஆசிரியர்,
ஈழநாதம்.

மாகாண சபையின் கீழ் பட்டதாரிகள் அனைவருக்கும் பயிற்சியளிப்பதற்காக திருகோணமலையிலுள்ள உட்துறை அமைச்சின் அலுவலகத்தில் பெப்ரவரி 23 ஆம் திகதி தொடக்கம் மார்ச் 1 ஆம் திகதி வரை நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டது.

இதில் 25, 26 ஆம் திகதிகளில் சமுகமளித்த பட்டதாரிகளின் தொகை அதிகமாக இருந்ததால் இரு பிரிவுகளாக நேர்முகப்பரீட்சை நடாத்தப்பட்டது இதில் ஒரு பிரிவில் சமுகமளித்தவர்களுக்கே நியமனங்கள் வழங்கப் பட்டுள்ளன மறுபிரிவில் சமூகமளித்த 125 பட்டதாரிகளுக்கு இதுவரை நியமனம் எதுவும் வழங்கப்படவில்லை.

மேலும் வழங்கப்பட்ட நியமனங்கள் தகுதி அடிப்படையில் வழங்கப்படவில்லை சங்கீதம், நடனம், கலைத்துறைப் பட்டதாரிகளுக்கு முகாமைத்துவ, சிறப்புப் பயிற்சிகளும் முகாமைத்துவம், வணிகம், விஞ்ஞானம் ஆகிய துறைகளுள் பட்டம் பெற்ற அனேகருக்கு ஆசிரிய நியமனமும் வழங்கப்பட்டுள்ளமை மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

இதனால் பட்டதாரிகளைப் பிரித்தறியத் தெரியாதவர்களாலேயே நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டுள்ளதெனப் பட்டதாரிகள் சந்தேகிக்கின்றனர்.

இவ் விடயம் சம்பந்தமாக பாதிக்கப்பட்டவர்களுள் சிலர் மாகாணசபை அலுவலகத்திற்குச் சென்றும் அங்குள்ளவர்களால் தாம் விட்ட பிழைகளை ஒப்புக்கொள்ள முடிந்ததேயொழிய எதுவித பலனும் கிடைக்கவில்லை.

எனவே இதில் சம்பந்தப்பட்ட அனைவரும் ஒன்றுகூடிப் பாதிக்கப்பட்ட மேற்படி 125 பட்டதாரிகளுக்கும் தகுதிக்கேற்ற நியமனங்களை கூடிய விரைவில் வழங்குமாறு பாதிப்படைந்த சகல பட்டதாரிகளும் வேண்டுகின்றனர்.

தா. தெய்வேந்திரம்.
அரியாலை.

ஈழநாதம்

# உள்ளூராட்சி ஆணையாளர்கள் தீவுப்பகுதி பிரச்சினை பற்றி ஆய்வு!

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதியின் மக்களைப் பற்றியும் இவர்களுடைய பிரச்சினை பற்றியும் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க தமிழீழ விடுதலைப் புலிகளின் தீவுப் பகுதி பொறுப்பாளரின் வேண்டுகோளின் பேரில் யாழ்மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சு. டிவகலாலா அவர்கள் நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, வேலணை ஆகிய பிரதேச சபைகளின் விசேட ஆணையாளர்களுடன் ஒன்று சேர்ந்து ஒரு கலந்துரையாடலை ஒழுங்கு செய்துள்ளார்.

இக் கலந்துரையாடல் இம்மாதம் இருபத்திரெண்டாம் திகதி காலை ஒன்பதுமணிக்கு வேலணையில் நடைபெறும் இக் கலந்துரையாடலுக்கு திணைக்கள அதிகாரிகளும், புத்திஜீவிகளும், பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் பங்குபற்றி தமது முயற்சிக்கு உதவும்படி கேட்டுக்கொள்கிறார்.

மேலும் திரு. டிவகலாலா அவர்கள் நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்துறை ஆகிய தீவுப்பகுதிகளின் நிலமைபற்றி தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது; யாழ்மாவட்டத்தில் உள்ள ஏனைய பகுதிமக்களிலும் பார்க்க பலவிதங்களில் பாதிக்கப்பட்டவர்களாக வாழ்வதும் இதனால் அப்பகுதியிலிருந்து அவர்கள் சிறிது சிறிதாக வேறு இடங்களுக்கு இடம் பெயர்வதும் வழமையான நிகழ்வாகிவிட்டது இந்நிலை இத் தீவுப்பகுதிக்கு ஆரோக்கியமானதல்ல இம் மக்களுடைய பிரச்சினை சரியானமுறையில் இனம் காணப்பட்டுஅதற்கு பரிகாரம்காணப் படவேண்டும் என்ற நோக்கத்துடனேயே இக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றுகுறிப்பிட்டுள்ளார்.

மேலும் தீவுப்பகுதியில் தற்போது உள்ள பிரச்சினை பற்றி குறிப்பிடும்போது இப் பகுதியில் நன்னீர் பெற முடியாது புகையிலை உற்பத்தி தற்போது பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது விவசாயம் செய்வதற்கு முடியாத நிலை தற்போது உள்ளது. ஆகவே இப்பகுதி மக்களுக்கு மாற்று வருமானம் பற்றி தீர்மானிக்க வேண்டும்.

இவற்றுடன் அண்மைக்கால அனர்த்தங்களால் முன்பு இருந்த தொலைத் தொடர்பு சேவை, மின்சாரவசதி, போக்குவரத்து வசதியும் சீர்கெட்ட நிலையில் தற்போது உள்ளது எனவும் அவ் அறிக்கையில் திரு டிவகலாலா அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## தற்செயலாக துவக்கு வெடித்து சிறுவன் பலி

(மட்டக்களப்பு)

ஏ. கே 47 துப்பாக்கி தற்செயலாக வெடித்து 15 வயது சிறுவன் ஒருவன் பலியானார்.

இச் சம்பவம் அண்மையில் கிரான் என்னுமிடத்தில் நடைபெற்றது.

உறவினர் வைத்திருந்த ஏ. கே. 47 ஐ எடுத்து விளையாட முயன்ற சமயம் வெடித்ததாக மரணவிசாரணையில் தெரிவிக்கப்பட்டது. (37)

## புதிய நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

கற்பகம் மணிப்புரி சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தின் ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த 5ஆம் திகதி சனிக்கிழமை மணிப்புரி கிராம அபிவிருத்திச் சபை காரியாலயத்தின் அருகாமையில் நடைபெற்றது.

திரு. க. பாலசுப்பிரமணியத்தின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. ச. ஞானப்பிரகாசம், திரு, ச. முருகநேசன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

நடப்பு ஆண்டு நிர்வாகிகளாக திரு. க. பாலசுப்பிரமணியம் (தலைவர்) திரு. கி. மரியநாயம்(செயலாளர்)திரு ஐ. யோகானந்தம் (பொருளாளர் மற்றும் நன்கு பேர் நிர்வாகசபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

கூட்டத்தில் இறுதி நிகழ்ச்சியாக மகளிர் குழுவால் ஒழுங்கு செய்யப்பட்ட பல கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

## பொத்துவில்,

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தூரத்திற்கு இந்த எண்ணெய் நீரின் மேற்பரப்பில் தேங்கிக் காணப்பட்டதாகவும் மீனவர்கள் தெரிவித்தனர்.

கடந்த வாரம் முதல் கடல் அலைகளின் மூலம் எண்ணெய் கரையை வந்தடையத் தொடங்கி இருக்கின்றது. இதனால் கடல்மண் எண்ணெய்நிறைந்த மண்ணாககாணப்படுகின்றது. இந்தக் கடற்பரப்பில் பகல் 10 மணிக்குமேல்யாரும்நடந்து செல்ல முடியாது ஒரே சூடானதாக இருக்கின்றது. இந்தஎண்ணெய் கடல் நீரில் எவ்வாறு கலக்கப்பட்டது என்பது யாருக்கும் விளங்காததாகவே உள்ளது.

இதனால் இப்பகுதி மீனவர்கள் இக்கிராமத்திலிருந்து மீன் பிடிக்கச் செல்வது கடந்த மூன்றுவார காலமாக நிறுத்தி இருக்கின்றார்கள். இந்த எண்ணெய் கடலில் சென்ற எண்ணெய் தாங்கிக் கப்பல்களிலிருந்து கசிந்திருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

## பாண்டிச் சேரியில் கம்பன்விழா

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 10, 11, 12, 13 ஆகிய திகதிகளில் தென்னிந்திய மாநிலமான பாண்டிச்சேரியில் நடைபெறவுள்ள கம்பன் விழாவில் பங்கு கொள்ளும் பொருட்டு அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் ஏழு பேர் கொண்ட குழு இன்று இந்தியா பயணமாகின்றது.

## கேரதீவில் குடிநீர்வசதி

(ஈச்சமோட்டை)

மன்னார்-யாழ்ப்பாணம் பயணிகளின் நன்மை கருதி கேரதீவுஇறங்குதுறையில் குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது.

பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இருபெரிய பெரல்கள் மூலம் குடிநீரை வழங்கி வருகிறது.

## வடமாகாணத்திற்கு.

(1ஆம் பக்க தொடர்ச்சி

திணைக்களம் மத்திய அரசாங்கின் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதே ஆகும். எமது பகுதி வனவளத்தைப் பாதுகாப்பதில் நாம் சொந்தமாக எதுவிதத் திட்டங்களும் தீட்டி நடைமுறைப்படுத்த முடியாத நிலையில் உள்ளோம் என்றும், மத்திய அரசினால் தீட்டப்படும் திட்டங்கள் எமது பகுதியில் முழுமையாக அமுல்படுத்துவதும் அதற்கான வசதிகளைச் செய்து தருவதும் மிகக்குறைவேயெனவும் அந்த அலுவலர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (லோ)

## முறைசாராக் கல்வி,

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வைபவத்திற்கு மல்லாகம் மகாவித்தியாலய அதிபர் ஏ. மகாதேவா தலைமை தாங்குவார்.

ஷெட்டோல் வியாபாரம் ஆங்கில தட்டெழுத்து சுருக்கெழுத்து, உடை அமைத்தல் ஆகிய பாடங்கள் இங்கு ஆரம்பித்து வைக்கப்படும்.

இதற்கு வெளிக்கள உத்தியோகஸ்தர் எஸ். வி. எஸ். சிதம்பரநாதன், வி. பாலகிருஷ்ணன் ஆகியோர்கள் பிரதம விருந்தினர்களாக கலந்து கொள்வர். (லோ)

## கூட்டுறவுசங்க பொதுக்கூட்டம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் ஒன்று எதிர் வரும் பதின்மூன்றாம் திகதி காலை ஒன்பது மணியளவில் புங்குடுதீவு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில்சங்கத் தலைவர் திரு. ப.கனகலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் சங்க ஊழியர்களுக்கு ஒரு மாத வேதனத்தை ஊக்குவிப்பாக வழங்குதல், புங்குடுதீவு மக்களுக்கு குடி நீர் விநியோகம் செய்வதற்கு கிணறு ஒன்று அமைக்க சாட்டியில் காணி ஒன்று கொள்வனவு செய்வதற்கு அங்கீகாரம் பெறுதல் போன்ற விடயங்களுடன் வேறும் பல முக்கியவிடயங்கள் பற்றிஆராயப் படும். (2-)

## கட்டணம்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொறியியலாளர் திரு. பி. இராஜேஸ்வரன் இத்தகவலைத் தெரிவித்தார்.

தொலைபேசிக் கட்டணம் 69,869 ரூபா 95 சதம் தொலைபேசி வாடகை 57,000 00 ரூபா என நிலுவையாக 1 இலட்சத்து 27 ஆயிரத்து 269 ரூபா 95 சதம் உள்ளது என்றார். (37)

## 4ஆம் ஆண்டு வீர அஞ்சலி

வீரமரணம்

20-04-1986



வீர ஜனனம்
**28-05-1961**
லெப். கந்தன்
(எட்மன் சத்தியசிலன்)
பருத்தித்துறை



வீர ஜனனம்
**17-03-1963**
லெப். ரமணன்
(இராசசேகரம் பிரேமச்சந்திரன்)
வல்வெட்டித்துறை

நீங்கள் அன்று சிந்திய குருதி
அன்றே காய்ந்து விட்டது
ஆனால், இன்றும் அம்மண்
செந்நிறமே தான்
உங்கள் உடல்கள்
அன்றே குளிர்ந்துவிட்டன
ஆனால் இன்றும்
உங்கள் துப்பாக்கிகள்
கனன்றுகொண்டேயிருக்கின்றன.

நண்பர்கள்

## புதியவிளையாட்டு மைதானம்

(முள்ளியவளை)

முள்ளியவளையில்,லோரஸ் பூங்காவிற்கு பின்புறம் அமைந்துள்ளதுதிறந்தவெளியரங்கும் விளையாட்டு மைதானமும் ஆறு வருடங்களின் பின் இப்போது திருத்தியமைக்கப் பட்டு வடக்குக் கிழக்கிலேயே பெரிய விளையாட்டு அரங்காக அமைக்கப்படுகிறது.

## மட்டக்களப்பில் மீன் வளர்ப்பு அபிவிருத்தி நிலையங்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மீன்வளர்ப்பு அபிவிருத்தி நிலையங்கள் அமைக்கப்படுவதற்கான ஆரம்ப முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட மீன்பிடி விரிவாக்க அலுவலர் திரு. ஏ.ரி. ஜோர்ஜ் தெரிவித்தார்.

இக்கினியாகலயிலுள்ளது போல் நன்னீர் மீன்வளர்ப்பு அபிவிருத்தி நிலையம் உன்னிச்சையில் அமைக்கப்படவுள்ளது.

உவர் நீர் மீன் வளர்ப்பு நிலையம் பால மீன் மடுவில் அமையும்.

## சுற்றறிக்கைப்படி நடவடிக்கைஎடுக்கமுடியாது

- யாழ். அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

உள்நாட்டு வியாபார ஆணையாளர் யாழ். செயலகவிலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளுக்கு அண்மையில் ...

... மால் தற்போதைக்கு அமுல்படுத்த முடியாது வடபகுதியில் நீதிமன்றங்களோ அல்லது ஏனைய சட்ட நடவடிக்...

## கசிப்பு காய்ச்சியவர்கள் ஊர்வலமாகச் சென்றனர்

(முள்ளியவளை)

கண்ணீரூற்று, முள்ளிய ...

யோக மகளிர் குழுவால் ஒழுங்கு செய்யப்பட்ட பல கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

## புதியவிளையாட்டு மைதானம்

(முள்ளியவளை)

முள்ளியவளையில், லோரஸ் பூங்காவிற்கு பின்புறம் அமைந்துள்ளதுதிறந்தவெளியரங்கும் விளையாட்டு மைதானமும் ஆறு வருடங்களின் பின் இப்போது திருத்தியமைக்கப்பட்டு வடக்குக் கிழக்கிலேயே பெரிய விழையாட்டு அரங்காக அமைக்கப்படுகிறது.

இருக்கின்றார்கள். இந்த எண்ணெய் கடலில் சென்ற எண்ணெய் தாங்கிக் கப்பல்களிலிருந்து கசிந்திருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

தியில் முழுமையாக அமுல்படுத்துவதும் அதற்கான வசதிகளைச் செய்து தருவதும் மிகக்குறைவேயெனவும் அந்த அலுவலர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (லோ)

## மட்டக்களப்பில் மீன் வளர்ப்பு அபிவிருத்தி நிலையங்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மீன்வளர்ப்பு அபிவிருத்தி நிலையங்கள் அமைக்கப்படுவதற்கான ஆரம்ப முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட மீன்பிடி விரிவாக்க அலுவலர் திரு. ஏ.ரி. ஜோர்ஜ் தெரிவித்தார்.

இக்கினியாகலயிலுள்ளது போல் நன்னீர் மீன்வளர்ப்பு அபிவிருத்தி நிலையம் உன்னிச்சையில் அமைக்கப்படவுள்ளது.

உவர் நீர் மீன் வளர்ப்பு நிலையம் பால மீன் மடுவில் அமையும்.

பாலமீன் மடுவில் றால் வளர்ப்பு நிலையம் அமைக்கப்பட்டு குஞ்சு றால் விநியோகமும் இடம் பெற திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. என்று அவர் குறிப்பிட்டார். (37)

## கசிப்பு காய்ச்சியவர்கள் ஊர்வலமாகச் சென்றனர்

(முள்ளியவளை)

சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்ட இருவருக்கு ஊர்வலத் தண்டனை வழங்கப்பட்டது.

முறிப்பைச் சேர்ந்த இந்த இருவரும் கசிப்பு உற்பத்தி செய்யும்போது விடுதலைப் புலிகளால் கையும் மெய்யுமாகப் பிடிபட்டனர்.

தண்ணீரூற்று, முள்ளியவளை பிரதான வீதிகளுடாக கசிப்பு வடித்த கருவிகளுடன் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

'இனிமேல் கசிப்பு வடிக்க மாட்டோம்' என்று கோஷமிட்டவாறு ஊர்வலமாக வந்ததைப் பொதுமக்கள் பார்த்த வண்ணம் இருந்தனர் (58)

### தமிழ் மொழி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் தமிழ் மொழியில் விண்ணப்பம் செய்தவர்கள் எவருக்கும் நேர்முகப் பரீட்சைக்குக் கடிதம் கிடைக்கவில்லை.

ஆங்கில மொழியில் விண்ணப்பம் செய்தவர்களுக்கு மட்டும் கடிதம் வந்துள்ளதாகப் பலரும் எமது செய்தியாளரிடம் கவலையுடன் தெரிவித்தனர். (37)

### இடிதாக்கி..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மற்றோர் தினத்தில் பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்த போது பல இடங்களில் மின்னல் தாக்கியதால் பல சிறுவர்கள்அதிர்ச்சிக்குள்ளாகி மயங்கி வீழ்ந்தனர். பலத்த காற்றினால் பல மரங்கள் அடிசாய்ந்தன. (54)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

நயினாதீவு

### திருமதி நாகரெத்தினம் நாகேசு

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 01-08-1924 | 08-04-1990 |

திதி: 08-05-1990

அன்னாரின் அந்தியேட்டி நயினாதீவு தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்தியம் இல்லத்திலும் 08-05-1990 (இன்று) செவ்வாய்க்கிழமை நடைபெறும். உற்றார், உறவினர்: நண்பர்கள் இவ்வழைப்பினை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்,

அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மற்றும் உறவினர்கள்.

நயினாதீவு-3

08-05-1990

(R/461)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31- ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மே மாதம் -08ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

### சாம் தம்பி..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

செனட்டராக இருந்த திரு. மு. மாணிக்கத்தின் மகள் கலாவைத் திருமணம் செய்து கொண்டார். திருமணத்துக்கு முன் செல்வி கலா மாணிக்கமும் தமிழரசுக் கட்சியில் ஈடுபாடு கொண்டிருந்ததோடு கட்சிப் பிரசாரக் கூட்ட மேடைகளிலும் பேசிவந்தார்.

பின்னர் தமிழீழ விடுதலைக் கூட்டணியுடன் சாம் தம்பிமுத்துவும் கலா தம்பிமுத்துவும் ஈடுபாடு கொண்டிருந்தனர்.

கடந்த பொதுத் தேர்தல் சமயத்தில் ஈ. பி, ஆர், எல். எப் இயக்கத்துடன் சேர்ந்து பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டார். இந்திய இராணுவத்துடனும் இந்திய உளவுப் பிரிவான றோவுடனும் சாம். தம்பிமுத்து நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார் இச் சமயத்திலும் இவர்மீது இனந்தெரியாதோரால் கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டது. தெரிந்ததே.

திரு. சாம் தம்பிமுத்துவும் மனைவியும் இம் மாதம் பத்தாம் திகதி கனடாவுக்குச் செல்வதற்கு சகல ஒழுங்குகளும் செய்யப்பட்டிருந்த தாகவும் இதன்பின் அங்கிருந்து அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய இடங்களுக்கும் செல்லத் திட்டமிட்டிருந்ததாகவும் கூறப்படுகிறது.

சட்டத்தரணியான திரு. சாம் தம்பிமுத்துவுக்கு வயது 57.

இவரது இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறலாமென அறியப்படுகிறது.

### கட்டணம்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொறியியலாளர் திரு. பி. இராஜேஸ்வரன் இத்தகவலைத் தெரிவித்தார்.

தொலைபேசிக் கட்டணம் 69,869 ரூபா 95 சதம் தொலைபேசி வாடகை 57,000 00 ரூபா என நிலுவையாக 1 இலட்சத்து 27 ஆயிரத்து 269 ரூபா 95 சதம் உள்ளது என்றார். (37)

னத்தை உணக்குவிப்பாக வழங்குதல், புங்குடுதீவு மக்களுக்கு குடி நீர் விநியோகம் செய்வதற்கு கிணறு ஒன்று அமைக்க சாட்டியில் காணி ஒன்று கொள்வனவு செய்வதற்கு அங்கீகாரம் பெறுதல் போன்ற விடயங்களுடன் வேறும் பல முக்கியவிடயங்கள் பற்றிஆராயப் படும். (2-)

## சுற்றறிக்கைப்படி நடவடிக்கைஎடுக்கமுடியாது

- யாழ். அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

உள்நாட்டு வியாபார ஆணையாளர் யாழ். செயலக விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளுக்கு அண்மையில் விடப்பட்ட அறிவித்தலுக்கு யாழ். அரசாங்க அதிபர் ஊடாக பதில் அனுப்பப்பட்டுள்ளது.

யாழ். செயலக விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளுக்கு விலைக்கட்டுப்பாட்டு சட்டத்தின் கீழ் அமுல் படுத்த முடியாது போனால் அவர்கள் உடன் இடமாற்றம் செய்யப்படுவர் என அறிவுறுத்தல் கொடுக்கப்பட்டு ஒரு சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருந்தது இச் சுற்றறிக்கையின்படி எதுவித நடவடிக்கையும் தம்மால் தற்போதைக்கு அமுல் படுத்த முடியாது வடபகுதியில் நீதிமன்றங்களோ அல்லது ஏனைய சட்ட நடவடிக்கைகள் எடுக்க கூடிய வழிமுறைகளோ இல்லாததினால் எம்மால் இக் கட்டளைச்சட்டத்தை நடைமுறையில் கொண்டு வருவது முடியாத செயலாகும் என அரசாங்க அதிபர் மூலம் உள்நாட்டு வியாபா ஆணையாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. (லோ)

### காணிப்பதிவு.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொது நிர்வாக அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா அறிவித்திருந்தும் தமிழ்ப்பகுதியில்இவ்வாறு ஆங்கிலத்தில்கடிதங்கள் அனுப்பப்படுவது குறித்து கிளிநொச்சிப் பகுதிமக்கள்விசனம் தெரிவிக்கின்றனர்.

## இரண்டாவது சமய அறிவுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு மணிபல்லவ சனசமூக நிலைய இரண்டாவது சமய அறிவுப் போட்டி பரிசளிப்பு விழா நிலையத் தலைவர் திரு. செ. நா. துரைராசா தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

## ஆசிரியர்களுக்கு உடன் இடமாற்றம் இல்லை

(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்கு மாகாணத்திலுள்ள மாவட்ட அடிப்படையில் நியமனம் பெற்ற ஆசிரியர்கள் வேறு மாவட்டங்களுக்கு உடனடியாக இடமாற்றம் செய்யப்பட மாட்டார்கள். எனினும் மாவட்ட சேவைத்திட்டத்தில் நியமனம் பெற்ற ஆசிரியர்களில் 5 வருட சேவை முடித்தவர்களை யாழ். மாவட்டத்திற்கும், 4 வருட மாவட்ட சேவை முடித்தவர்களை ஏனைய மாவட்டத்திற்கும் இரண்டாம் தவணை முடிவில் இடமாற்றம் செய்யப்படுவார்கள்

மேற்படி முடிவு, கடந்த சனிக்கிழமை வடக்கு,கிழக்கு மாகாண அமைச்சில் நடைபெற்ற இடமாற்றச் சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்டதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

1983ஆம்ஆண்டுக்கு முன்னர் நியமனம் பெற்றவர்கள், 5வருடசேவையை முடித்திருப்பின் யாழ். மாவட்டத்திற்கும், 4வருட சேவையை முடித்த பின்னர் வேறு மாவட்டத்திற்கும் ஜூன்1ஆம்திகதியிலிருந்து இடமாற்றம் பெறுவார்கள். யாழ் மாவட்டத்திலிருந்து வேறு மாவட்டங்களுக்கு இடமாற்றம் கோரிய அனைத்து ஆசிரியர்களும் சேவைக்காலத்தைக் கணக்கிலெடுக்காமலே ஜூன் 1 ஆம் திகதியிலிருந்து இடமாற்றம் செய்யப்படுவார்கள் என்றும் பொதுச்செயலாளர் தெரிவித்தார்.





| வீர ஜனனம் | வீர ஜனனம் |
|---|---|
| 28-05-1961 | 17-03-1963 |
| லெப். கந்தன் | லெப். ரமணன் |
| (எட்மன் சத்தியசீலன்) | (இராசசேகரம் பிரேமச்சந்திரன்) |
| பருத்தித்துறை | வல்வெட்டித்துறை |

நீங்கள் அன்று சிந்திய குருதி
அன்றே காய்ந்து விட்டது
ஆனால், இன்றும் அம்மண்
செந்நிறமே தான்
உங்கள் உடல்கள்
அன்றே குளிர்ந்துவிட்டன
ஆனால் இன்றும்
உங்கள் துப்பாக்கிகள்
கனன்றுகொண்டேயிருக்கின்றன.

நண்பர்கள்

R-459

## வீர அஞ்சலி



### சுப்பிரமணியம் திருநாவுக்கரசு கண்ணன் (ஜெமினி)

| பிறந்த திகதி | இறந்த திகதி |
|---|---|
| 14-05-1970 | 12-04-1989 |

உன் கல்லறையில்
நாம் பாடுவது...
சோக கீதமல்ல
சுதந்திர கானம்
விடுதலை ராகம்...
உன் வீரம்
உன் தியாகம்
எம்மின விடுதலை தீயில்
ஆகுதியாயின...
எம் பிரியத்துக்குரியவனே
களத்தில் மறைந்து
எம் இதயத் தளத்தில்
நிறைந்தவனே...
மண்ணின் மைந்தர்கள்
மரணிப்பதில்லையே...
நீயும் அப்படியே...

S. J. V. செல்வநாயகம் வீதி,
கோண்டாவில் கிழக்கு.

(B/640)